479

M. 2026. குரோதனஸு ஆவணிமு September 1925.

THE ... 30 OCT 1925 MADRAS

ஓம்

# சன்மார்க்க பானு

தொகுதி 1 பகுதி 8



VOL I.] SANMARGA BHANU [NO. 8.

பொருளடக்கம். பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... ... ... 225
2. பத்திராதிபர் குறிப்புரை ... ... 226
3. கடவுளும் மதங்களும் ... ... 228
4. ஒளவை அனுபவங்கள் ... ... 231
5. தியானம் ... ... ... ... 236
6. வேதாந்த சாஸ்திர சங்கிரக வினாவிடை 238
7. தருமரும் கீரிப்பிள்ளையும் ... ... 241
8. மாதரும் குடும்பங்களும் ... ... 243
9. என் மாமிசம் புசிக்கலாகாது ... 245
10. இலக்கண வினாவிடை ... ... 250
11. உயர்ந்த செல்வம் ... ... ... 253
12. உலக விநோதங்கள் ... ... 256


Editor: Pandit P. Srinivasalu Naidu.

Printed by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor, and published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15–0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20–0—0 |

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு ரூபா. | 10–0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, ,, ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, ,, ,, | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத் தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.
"சன்மார்க்கபானு" ஆபீஸ்,
ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மணே நமः

# சன்மார்க்க பானு

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—(குறள்)

*All Rights Reserved.*

கற்றை 1 } குரோதன ஸூ ஆவணி மீ. { கதிர் 8

## கடவுள் வணக்கம்.

மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்து நீ
மெய்யான மெய்யை யெல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை
மெய்யேது மறியாவெறும்
பொய்விடாப் பொய்யினே னுள்ளத் திருந்துதான்
பொய்யான பொய்யை யெல்லாம்
பொய்யெனு வண்ணமே புகலவைத் தாயெனிற்
புன்மையே னென்செய்குவேன்
மைவிடா தெழுநீல கண்ட குருவே விஷ்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கடொறு நின்றகுருவே
கைவிடா தேயென்ற அன்பருக் கன்பாய்க்
கருத்தூ டுணர்த்து குருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. (1)

பத்திநீ பத்திக்கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமார்மோன
முத்திநீ முத்திக்கான முதலுநீ முதன்மையான
புத்திநீ யெனக்கொன் றுண்டோ பூரணா னந்தவாழ்வே. (2)

# பத்திராதிபர் குறிப்புரை.

அலைகடலை யாடையாக வுடுத்த இவ்வவனியில் ஆறறிவோடு உதித்த மாந்தர்க்கு இனிய செவியுணவையும், நற்கல்வியோடு நன்மார்க்கத்தையும், பல உறுதி மொழிகளையும், ஆறுதலையும், ஞானத்தையும், இவைபோன்ற மற்றைய இகலோக பரலோகங்களுக்குரிய சகல பேறுகளையும், மாதாவையும், பிதாவையும், உற்றாரையும், நண்பரையும், ஞானசிரியரையும் போலிருந்து கொடுத்து, அவர்களை மேனிலையிலுய்த்தற்குத் தக்க கருவியாயிருப்பது பத்திரிகையேயாமென்பது அறிவுடையோர் துணிபு. பத்திரிகைகளின் மூலமாக தேசத்தை முன்னேற்ற மடையச் செய்வதே அறிவுடையாரது சிறந்த ஊழியமாகும். சிறந்த தேசாபிமானமும் பாஷாபிமானமும் மதாபிமானமும் உலகத்திற் பரவவேண்டுமாயின் பத்திரிகைகளில்லாமல் முடியாதென்பது ஊன்றி யோசிப்போர்க்குத் தோன்றாமற்போகாது. இதற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளே சாக்ஷி.

இங்ஙனமாக, நம் நாட்டிலோ கல்வியிலும் நாகரீகத்திலும் மிகுந்தவர்களாக இருப்பவர்களிலும் கூட பலர் பத்திரிகைகளினு லுண்டாம் நன்மைகளை அறியாமலிருக்கின்றனர். கூத்து முதலிய வீண் காரியங்களுக்காக இரண்டு ரூபாய் மூன்று ரூபாய்க் கதிகமாகவும் செலவு செய்ய விரும்புகின்றவர்கள் அன்றாடம் ஒரு சுருட்டுக்குச் செலவாகும் குறைந்த தொகையைக் கொடுத்து பத்திரிகை வாங்கும் விஷயத்தில் பரம தரித்திரர்கள்போல் நடிக்கின்றனர். வாசிக்க நேரமில்லை யென்னும் சாக்கைக் காட்டி வாங்காமலிருப்பவர்களும், பெருமைக்காக வாங்கி வாசிக்காமலே மூலையிலெறிந்துவிடுபவர்களும் நம் நாட்டில் மலிந்திருக்கின்றனர். அந்தோ பரிதாபம்! பரிதாபம்!! பல சிறந்த அறிஞர்களால் நடத்தப்பட்டவைகளும், படுகின்றவைகளுமாகிய பத்திரிகைகள் தலையெடுக்காமல் போயினமைக்கும் போகின்றமைக்கும் காரணம் இதுவே.

பத்திரிகைகளை நடத்துவது பெரும்பாலும் பண வருவாயாகிய லாபத்தைக்கருதி மூலதிரவியம் வைத்துச் செய்யப்படும் வியாபாரமல்ல; ஜனசமூக முன்னேற்றத்திற் குரிய ஊழியமேயாகும். இதை யுணர்ந்து, அன்பர்கள் ஆதரித்தாலொழிய எந்தப்பத்திரிகையும் ஈடேறுவதற்கேற்ற வழியில்லை. ஒவ்வொருவரும் கூடியவரையில் குறைந்த பட்சம் மூன்று நான்கு பத்திரிகைகளையாவது வரவழைத்து வாசிக்கவேண்டியது அத்தியாவசிய மாகலின், எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் நம் நாட்டிற்கு அத்தனையும் தேவையே.

முற்கூறிய நோக்கத்தைக்கொண்டே நமது, 'சன்மார்க்கபானு' வும் வெளிவரலாயிற்று. பத்திரிகாபிமானிகளாகிய சில நண்பர்கள்

தங்கள் சந்தாவை முன்னுடி செலுத்தியும், பல சந்தாதாரர்களைச் சேர்த்தும் ஆதரித்து வருகின்றனர். ஆயினும் பல நண்பர்கள் சந்தாப் பணத்தை அனுப்புமாறு எத்தனையோ முறை பத்திரிகையின் வாயிலாக எழுதிக்கேட்டும் இன்னும் அனுப்பாமலே இருந்து வருகின்றனர். இதனுல் பத்திரிகையைக் குறித்த காலத்தில் வெளிவரச்செய்யும் முயற்சிகள் வீணுகின்றன. இது சிலருக்கு அருவருப்பைத் தரக்கூடியதே யாயினும் உண்மை யுணர்ந்த பெரியோர் "பத்திரிகைகளுக்கு இவ்வித இடையூறுகள் நேரிடுவது சகஜமே" யென்றெண்ணிப் பொறுத்துக்கொள்வதுமன்றி, தம்மால் கூடிய உதவிகளைச் செய்து ஆதரிக்க முற்படுவதும் அவர் தம் கடமையாகும் என்பதைக் கூறவேண்டுவதின்று. ஆகலின், இதுவரை சந்தா அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் இனியும் காலந்தாழ்க்காமல் சந்தாத் தொகையை தயவுசெய்து உடனே அனுப்பிவிடுவார்களென்று எதிர்பார்க்கிறேம். அப்படி அனுப்பாதவர்கள் வி. பி. யில் அனுப்பும்பொழுது திருப்பிவிடாமல் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள். திருப்பிவிடுவதால் எமக்கு எவ்வளவு நஷ்டம் நேரிடும் என்பதை ஆலோசிப்பார்களாக. நிற்க சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும் எமது இச்சிறு ஊழியத்திற்கு உதவி செய்ய முன்வந்து தங்கள் நண்பர்களில் இருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து ஆதரிப்பார்களானுல் அதுவே சிறந்த பேருபகாரமாகும். அவ்வாறு அனுப்பும் அன்பர்கள் தங்கள் விலாசத்தையும் தெரிவித்தால் நன்றி யறிதலாக அவர்களது பெயர்கள் பத்திரிகையில் வெளியிடப்படும். தவிர, 10 சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருவோருக்கு இரண்டாவது வருட சஞ்சிகைகள் இலவசமாக அனுப்பப்படும். அன்பர்கள் தயவுடன் முன்வந்து உதவி புரிவார்களாக.

பத்திரிகையால் அடையவேண்டிய பலனைத் தமிழுலகம் அடையும்படி எமது பத்திரிகை செய்யுமாயின் அதுவே எமது உழைப்பிற்கேற்ற பிரதி பிரயோஜனமாகும்.

இந்த எமது பத்திரிகையும் இதுபோன்ற மற்றுமுள்ள பத்திரிகைகளும் எங்கும் உலவி தமிழுலகிற்குத் தக்க பயனளிக்குமாறு அருள் புரியும்படி எவ்லாம் வல்ல இறைவனது இணையற்ற இணையடிகளை ஏத்தி இறைஞ்சுவோமாக.

பத்திராதிபர்.

# சன்மார்க்கபானு.

குரோதன ஹூ ஆவணி மீ.

## கடவுளும் மதங்களும்.

உலகம் காரியவடிவம்; குடம் படம் (ஆடை) முதலிய வற்றைப்போல. எப்பொழுதும் எவ்விடத்தும் காரணமில்லாமல் காரியமுண்டாவதில்லை என்பது நியதி; ஆகலின் இப்பிரபஞ்சத் திற்கும் காரண கர்த்தா ஒருவரிருக்கவேண்டிய தவசியமாகிறது; குடம் செய்யக் குயவன் வேண்டியதுபோல. ஒரு காரியவஸ்து வின் மேன்மையைக் கண்டு அதன் கர்த்தாவின் வல்லமையை அறி வதுபோல, காரிய வடிவமாகிய உலக விசித்திரங்களைக் கண்டு அவற்றை யியற்றிய கருத்தா எவ்வளவு வல்லமையும் மகிமையும் உடையவரா யிருத்தல் வேண்டுமென்று ஒருவாறு ஊகிக்கலாம். அவர்தாம் கடவுள். எல்லா உலகங்களையும் அவற்றிலுள்ள சகல சராசரப் பொருள்களையும் படைத்துக் காத்துத் துடைப்பவர் அவரே. அவர் கருணையில் கடல்போன்றவர். அருளிற் குறை விடம். அன்பின் சொரூபி. அடி நடு முடிவற்றவர். ஒப்புயர் வற்ற தனிப்பொருள். அங்குள்ளார் இங்கில்லை இங்குள்ளார் அங் கில்லை என்று கூறுதற்கிடமின்றி எங்கும் வியாபித்திருக்கும் சர்வ பரிபூரணர். 'ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திரு நாமம் பாடி' என்னும் பெரியார் வாக்கின்படி, அவர் தமக்கென ஒருருவும் ஒருபெயரும் இல்லாதவராயினும், அறிஞர் அவரைச் சிவன் விஷ்ணு அல்லா என்னும் பல காரணப் பெயர்களிட்டழைப் பர்.

இத்தகைய கடவுளைப்பற்றிப் பலர் பலவித கொள்கை யுடையவரா யிருக்கின்றனர். ஒரு சிலர் கடவுள் இல்லையே

யில்லை; இருக்கவேண்டிய அவசியமு மில்லை என்று அபிப்பிராயப் படுவர். இவர்கள் கடவுள் இல்லையென்னும் கொள்கை யுடைய வர்களாகலின் நாஸ்திகர் (நாஸ்தி = இல்லை) என்னப்படுவர். கடவுள் உண்டென்று நம்புவோர் ஆஸ்திக ரென்னப்படுவர். இவ்வித கொள் கைக்கு மதம் என்று பெயர். 'இப்படிவன் இவ்வண்ணத்தன் என் றெழுதிக் காட்டொணாத' அப் பராபரனைப் பற்றிப் பலர் பலவித அபிப்பிராயங் கொண்டிருத்தலின் மதங்களும் பலவாயின. நாளா வட்டத்தில் அபிப்பிராய பேதங்காரணமாக எவ்வொரு ஆஸ்திக மதத்திலும் பல உட்புரிவுக ளுண்டாயின. மனோவாக்குக் காயங்க ளுக்குக் கோசரமாகாமல் அவற்றைக் கடந்து நிற்கும் தனிப்பொரு ளைப்பற்றி இத்தனை பேதக்கொள்கைகள் உண்டாவது ஆச்சரியமல் லவே. நேரில் காணக்கூடிய ஒரு பொருளைப் பற்றிய விஷயத்தி லேயே பலர் பலவாறான அபிப்பிராயங் கொள்வது சர்வ சாதாரண மாயிருக்கிறதல்லவா?

'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது' என்பது ஒரு பழமொழி. பிறவி துன்ப வடிவம், இவ்வுலக போகங்கள் அநித்தியம், ஆனந்தக்கடலாய் விளங்கும் ஆண்டவ னடிகளை யடைந்தோரே துன்பம் நீங்கி இன்ப மடைவர் என்று கூறும் தத் தம் மதக்கொள்கைகளின்படி இறைவனை இறைஞ்சத் தொடங்கி ஞேர், 'குளிக்கப்போனவன் சேற்றில் விழுந்து புரண்ட' கதைக் கொப்பத்தீவினையை மேலும் மேலும் திரட்டத் தொடங்கி விட்ட னர். 'எமது மதமே பெரிது' என்னும் அகங்காரம் தலைகாட்டிற்று. முதலில் வாய்ச் சண்டையா யிருந்தது கைச்சண்டையாய் விட்டது. எமது மதம் பெரிது என்பது மாறி, எமது தெய்வம் பெரிது உமது தெய்வம் சிறிது என தெய்வப்பாகு பாடு முண்டாயிற்று. "எமது கடவுளும் உமது கடவுளும் குஸ்தி பிடித்தார்கள், உமது தெய்வம் தோற்றுப்போய்விட்டது; உங்கள் சாமிக்குக் கூத்தியார் உண்டு; எங்கள் கடவுளுக்கு நான்கு மனைவிகள் ஆறு பிள்ளைகள்; உங்கள் சாமி வசிக்கும் ஊரில் அம்பட்டன் இல்லைபோலிருக்கிறது, அதனால் தான் அவர் மீசை தாடிகளோடிருக்கிறார்; உங்கள் சாமி கறிதின் பார்" என்னு மிவைபோன்ற தூஷணைகளால் கடவுளை வாய்கூசா மல் வைய ஆரம்பித்து விட்டனர். இதோடு நின்றதா! அனேகம்

ஆலயங்கள் அழிந்தன; அனேகம் தலைகள் உடைந்தன; அனேகர் ஆவி யிழந்தனர்; கோர்ட்டுகளுக்கும் வக்கீல்களுக்கும் பொய்ச் சாட்சிகளுக்குமாக அளவற்ற பணம் செலவழிக்கப்பட்டன; தேசத்தில் ஒற்றுமை யொழிந்து வேற்றுமை மிகுந்து பலக்குறைவு நேரிட்டது. "ஐயோ! கடவுள்என்று ஒருவர் ஏன் இருக்கவேண்டும்; பல மதங்கள் ஏன் உண்டாகவேண்டும்; இவைகளில்லாமலிருந்தால் இவ்வித மதச் சண்டைகளும் கட்சிச் சண்டைகளு மின்றி யாவரும் ஒற்றுமையாயிருக்கக் கூடுமல்லவா! அதனால் 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' என்றபடி, தேசத்திற்கும் மிக்க நன்மை யுண்டாகுமே" என்று நினைக்கக் கூடியவாறு ஆய்விட்டது மதவாசாய்ச்சியின் முடிவு. இவர்கள் சொல்லுகிறபடி பல தெய்வங்களிருந்து, ஒவ்வொன்றும் 'நான்தான் பெரியவன், நான்தான் பெரியவன்' என்று சண்டை பிடித்துக்கொண்டால், எந்தத்தெய்வம் சமாதானம் செய்வது. அந்தோ! இஃதென்ன அறியாமை!

இவர்கள் இவ்வாறு தூஷித்துச் சண்டையிடுவதால், 'நாய்கள் குலைப்பதால் மலைக்குச் சிறிதும் குறைவுண்டாகா' ததுபோல, 'அகரமானதுதானே எல்லாவெழுத்துக்களாகியும் அவற்றினின்று வேறுபட்டுமிருத்தல்போல, எல்லாச் சமயமுமா யல்லவாகி யாது சமயமும் வணங்கு மியல்பாகி' யிருக்கும் கடவுளுக்குச் சிறிதும் குறைவுண்டாதலில்லை யாயினும், தாமச குணத்தை மேற்கொண்டு தம் தம் மதத்தையே மேன்மையென்று உளறுமவர்களே, புண்ணியம் செய்வதாக நினைத்துப் பாபங்களுக் காளாவதுமன்றி அவரால் அருவருக்கவும் படுவார்.

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில்மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா."
"ஆறொத் திலங்கும் சமயங்களுக்கு மாழ்கடலாய்."
"யாது சமயமும் வணங்கு மியல்பதாகி." (தாயுமானவர்.)

என்றபடி, மலைகளினின்றும் பெருக்கொடுத்தோடும் நதிகளெல்லாம் முடிவில் கடலிற் சென்று கலத்தற்போலவும், ஒரூரைநோக்

கிச்செல்லும் வழிகள் பலவும் முடிவில் அவ்வூரையே சென்றடைதல் போலவும், எம்மதத்தார் எப்பெயராலழைத்துத் துதிப்பினும் அத்துதிகளெல்லாம் அவரையே சென்றடையும். தவிர,

அவ்விறைவர் எச்சமயத்திற்கும் உட்பட்டவரல்லர். சமய நெறி காணாத சாட்சி. சமயாதீதப் பழம்பொருள். சமயத்தார் அவரைக்கண்டது யானையைக்கண்ட குருடர் கதைக்கே ஒப்பாகும். யார் யார் எவ்வெவ்விதமாகச் கருதித் தியானிக்கின்றார்களோ, அவ்வவ் வடிவமாக நின்று அவரவர்க்கு அருள் புரிவது அவரது இலக்கணமாகலின், ஒவ்வொரு மதத்திலும் உண்மையுண்டு. இன்றேல், அவை நிலைபெற்றிராமலழிவடையும். மதத்தில் ஒன்றுமில்லை பத்தியிலிருக்கிறது. இதனால் மதம் வேண்டாமென்பதில்லை. மதம் அவசியமே. ஒவ்வொருவரும் தந்தம் மதத்தில் பற்றுடையராயிருத்தல் நியாயமேயன்றி பிறமதங்களைத் தூஷித்தல் சரியன்று.

மதாபிமானிகள் இனியேனும் இவ்வுண்மையை யுணர்ந்து தேச வொற்றுமைக்குப் பங்கம் விளைப்பதாகிய மதச்சண்டைகளை யொழித்து 'எம்மதமும் சம்மதமே' என்னும் சமரஸ பாவங் கொண்டு சாந்த குணசீலர்களாய் இடைவிடாது அவரது திருவடித் தாமரைகளைத் தியானித்து நிரதிசயப் பேரின்பப் பேற்றிற்குப் பாத்திரர்களாய் விளங்குமாறு ஆண்டவன் அருள் புரிவாராக.

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளு மவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. (திருமந்திரம்.)

ஓம் தத் ஸத்.

---

ஓம்.
செந்திலாண்டவன் றிருவடி துணை.

## ஔவை அனுபவங்கள்.

[*Copy right by the Author.*]

(94-ம் பக்கத் தொடர்ச்சி.)

வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் மூத்த ஓர் கிழவி, வானளாவும் வீடுகளையுடைய வீதி வழியே, தன் நண்பையை நாடி நடந்துகொண்டிருந்தாள். அப்போது,

'வையம் பகலிழப்ப, வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய வன்றி றுணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.'

நீல விதானத்தில் மணிகள் விரிசுடர் வீசுவதியைய, ஒவ்வொன்றாய் விண்மீன்கள் விண்ணிடை பூத்தன.

சிறிது நேரத்திற்கெல்லாம், வடகிழக்கு வானத்தினின்றுங் கிளம்பிய கார்மேகம் ஒன்று, சில்லென்ற காற்றை வீசி, உடுக்கண்களை ஒன்றொன்றாய் மறைத்துக் கொண்டே வந்தது. திடீரென்று, அறத்தினுக்கியார் கொண்ட அகமெனத் திசைகளெங்கும் கருத்திட்டது. மேகங்களைக் கிழித்துக்கொண்டு கண்களைப் பறிக்கும் மின்னல்களும் தோன்றின. மழையும் பெய்தது.

அதிலகப்பட்டுக்கொண்ட அவ்வம்மையார், "மணாளனை எண்ணி ஏக்கப்பட்டுக் கொண்டிருக்கும் செல்லம்மாள் எது செய்கின்றனளோ? நாழிகை யாகிவிட்டதே! அவளுக்குச் சந்தோஷத்தையும் சித்தவமைதியையுந் தரத்தக்க செய்தியைத் தெரிவிக்குமாறு புறப்பட்ட நம்மை, காற்றுடன் கூடிய இம்மழை இக்கட்டுக்குள்ளாக்கி விட்டதே! என் செய்வோம்?" என்று கவலைப்பட்டவராய், திக்குந் திசையுந் தெரியாத அம் மையிருட்டில் வீட்டின் அடையாளமுங் கண்டுபிடிக்க அசக்தராய்ப் பக்கத்திலிருந்த இல்லத்தின் றிண்ணையிற் றங்கினர். அப்பொழுது,

"இனியேதெமக்குனருள் வருமோவெனக்கருதி
  யேங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
  றெண்ணவோ திடமில்லையே
யனியாயமாயிந்த வுடலை நானென்றுவரு
  மந்தகற் காளாகவோ
வாடித்திருந்துநான் கற்றதுங்கேட்டது
  மவலமாய்ப் போதனன்றோ
கனியேனும்வறியசெங் காயேனுமுதிர்சருகு
  கந்தமூலங்களேனுங்
கனல்வாதை வந்தெய்தினள்ளிப் புசித்துநான்
  கண்மூடி மௌனியாகி
தனியேயிருப்பதற் கெண்ணினேனெண்ணமிது
  சாமிநீ யறியாததோ
சர்வ பரிபூரணவகண்ட தத்துவமான
  சச்சிதானந்த சிவமே!"

என்று, உடல் குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள் ஊற்றென வெதும்பியூற்ற தன் தங்கக்கம்பிபோன்ற குரலில் பாடிக்கொண்டிருந்த

ஓர் காரிகையின் குரல், மன்னுபுகழ் பாட்டியாரின் செவியிற் புக்கு அவர் மனதையும் அனலிடைமெழுகென உருக்கிற்று. உடனே, உருக்கப் பட்ட மனது வெளிவருவதியைய சுருங்கி யிருந்தாலும் வண்ணத்திற் குறையாதிருந்த கன்னங்களில் கண்ணீர் கிளம்பி வழிந்தது. உடனே அவரும், "ஆகா! என்ன சாரீரம்!" என்ருச்சரியப்பட்டார். அவ்விஞடி யில், அப் பாடலைப் பாடிய பெண்மணியின் பங்கயமுகத்தினைப் பார்த்துக் களித்து ஆசீர் வதிக்கவேண்டுமென்றவர் உள்ளத்தில் உண்டான ஆவல் இத்தன்மையதென உரைக்கத்தக்க ஆற்றல், அந்த ஸ்திதியிலிருந்து அனுபவித்தவர்களுக்கே யன்றி அந்நியருக்கு உண்டாகாது. ஆகவே, உட்கார்ந்திருந்த இடத்தினின்றும் எழுந்திருந்தார்.

அச்சந்தர்ப்பத்தில் ஓர் பெரிய பெருமூச்சு அவர் காதுகளில் விழுந்தது. அடுத்தவிஞடியில் பெருமூச்சு பிறந்த பக்கத்திலிருந்து 'தடா' ரென்று தரையில் கனமாக ஏதோ ஒன்று விழுந்த சப்தமுங் கேட்டது.

கேட்டதுதான் தாமதம். என்ன சங்கதியோ?, ஏதோ?, என்று பரபரப்புடன் நடந்து, சாதாரணமாகத் தாளுமிடாது சாத்தப்பட்டிருந்த வாயிற்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். அவருடைய கால்கள், இரு வாயிற்படிகளைத் தாண்டி, அவரைக் கூடத்திற் .கொண்டு போய்விட்டன.

'எத் துக்ககரமான சம்பவம் எதிர்படுமோ!' என்ற கவலையுடன் நாற்புறங்களையுந் தேடிக்கொண்டிருந்த அவர் அழகு நயனங்கள், தன் ஞாபகமற்றுத் தரையில் விழுந்துகிடந்த வனிதாமணியை நோக்கிக் கண்ணீர் பெருக்கின.

பாட்டியாருக்கப்பொழுது இவ்வளவு அவ்வளவு எனுதபடி அல்ல லுண்டாயிற்று; தம் கண்களைச் செவ்வனே துடைத்துக்கொண்டார்; அவ்வணங்கினை அணுகினர்; விழுந்து கிடந்த மாதரசியின் மலர்க்கண்கள் மூடியிருந்ததைக் கண்டு, 'பிரக்ஞைபோய்ப் படுத்துக்கொண்டிருக்கிறுள்;' என்று உணர்ந்தார்; நற்காலத்திற் கறிகுறியாகச் சமீபத்திலிருந்த செம்பு ஜலத்தை எடுத்து, அவள் மூளையைக் குளிர்ச்சி செய்தார்; சுவாசம் விடுவ தற்குச் சுலபமாயிருக்கும் வண்ணம்,—மேனுட்டு நாகரீகம் புகுந்துள்ள இக்காலத்துக்குலமகள் அணிந்துகொண்டிருக்கும் இரவிக்கைபோலத் 'தொள-தொள' வென்றில்லாமல் — 'உடம்போ டெடம்பாய்த் தைக்கப் பட்டதோ' என்று ஐயுறுமாறு அவ்வளவு இறுக்கமாய்த் தைக்கப்பட்டு, முடியுமிடப்பட்டிருந்த இரவிக்கையின் முடிப்பை வெகு சிரமத்துடன் அவிழ்த்து, இடுப்புத்துணியையும் கொஞ்சம் தளர்த்திவிட்டார்; 'உயிர்

இருக்கின்றதோ? இல்லையோ?' என்று உற்றுநோக்கினர். இராக்கமலம் நிகர்த்த அம்முகம், அவருக்குத் தெரிந்ததாயிருந்ததுடன், அவர் நாடித் தேடிவந்ததாயு மிருந்ததைக் கண்டு அளவு கடந்த ஆச்சரியம் அடைந்தார். ஆயினும், 'காட்டிலே புஷ்பித்த எண் ணிறந்த வாசனையும், அழகும் பொருந்திய தேன்மலர்ப்போலாகிவிடுமோ இது?' என்னுங் கவலை மாத்திரம் கிளம்பாமலிருக்கவில்லை.

இவர் செய்த அன்பான ஆசோபசாரங்களினல், சிறிதுநேரஞ் சென்றபின்னர் செல்லம்மாள் தன் செந்தாமரைக் கண்களைத் திறந்தாள்; சுயநலங் கருதாது பிறர் நலங் கருதும் ஒருருவம் குனிந்து, தன்னைக் கருத்துடன் கவனித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்; அச்சமயத்தில் அவ்வுருவம் ஆர் என்று அறிந்துகொள்ள அவளால் ஆகவில்லை. கிழவியார் கட்டுக்கடங்காத ஆவலுடன் இன்னும் உற்றுநோக்கினர். அப்போது, தெரியுந் தெய்வமாம் அச்சமயசஞ்சீவியின் சுவாசம், சிறிது சிறிதாக, கண்ணுடி நாணும் காரிகை கன்னங்களின்மேல் பட்டது. அச்சுவாசம், செல்லம்மாளின் செவ்விய ஞாபகத்தை மறைத்துக் கொண்டிருந்த மேகத்தை நீக்கியதோவென்று ஆச்சரியப்படும்படி, செல்லம்மாள் சுய ஞாபகம் அடைந்து மறுமுறையும் அவ்வதனத்தை நோக்கினுள். அது, தனக் கெவ்விதங்களிலும் உதவிசெய்யக் கூடிய பரோபகாரி ஒளவையாரின் பூத்தமுகம் என்பதை அறிந்து கொள்ளத்தவற வில்லைஎன்பதை, அவள் அதரங்களைச் சூழ்ந்துகொண்ட நன்றி செலுத்துவதும், சந்தோஷத்தைத் தருவது மான புன்முறுவல் காட்டிற்று.

பிறகு, அவள், "பாட்டி!" என்றழைத்தாள். அப்படி அழைக்கும் போது, துக்கத்தால் நிறைந்திருந்த அவள் மனப்பெட்டியிலிருந்து ஒரு பெருமூச்சும் புறப்பட்டது.

தன் ஐம்புலன்களுக்கும் மகிழ்ச்சியைத் தரத்தக்க அவ்வினிமையான பதங்களை உச்சரித்த பவளம்போன்ற அதரங்களைப் பார்த்தாள் பாட்டி. "ஆகா! தேவமாதர்கள் மனத்தில் பொறாமையை உண்டாக்கும் எழில் வாய்ந்த இன்னவன் வெற்றிலை பாக்குக்கூட சென்ற சில வருஷங்களாகப் போட்டறியாளே! அவ்வாசனையை யடையாதிருக்கிற காலத்திலேயே இவ்வளவு செக்கச் செவேரென்றுள்ள இவ்வதரங்கள், இவள் கழுத்திற்றுலங்கும் மஞ்சள் கயிற்றைக் கட்டிய கணவன் கன்னங்களில், அச்சிவப்பு வர்ணத்தை முத்திரிக்கப் போதுமான, அவ்வளவு நாட்களனுபவத்தை அடைந்திலது போலும்;" என்றெண்ணினர். எண்ணி, "கண்மணி! சென்ற சமயம் என் தாகவிடாயைத் தணித் தாதரித்த செல்வமே! இன்னும் உன் துக்கம் அதிகரித்திருப்பதற்குக் காரணம்

என்ன? உன் மனத்தைத் தின்னும் உட்புழு இன்னும் இறந்து இருந்த இடந்தெரியாமல் அழியவில்லையா?'' என்று அன்னையினும் அன்பாகக் கேட்டாள்.

அக்காலை அம்மடக்கொடி, ''நக்ஷத்திரங்களும், சூரிய சந்திரரும் உள்ளநாள் வரையில், அவைகளைப் போலப் பிரகாசிக்கும் கீர்த்தியை நாட்டப்போகின்ற, எடுப்புமிணைப்பு மற்ற எழிலரசி! உங்கள் தரிசன மாத்திரத்தால் என் துக்கமெல்லாம் 'சூரியனைக்கண்ட பனிபோல்' இருந்த இடந்தெரியாமல் பறந்து போய்க் கொண்டிருக்கின்றன; பாட்டீ! உங்களுக்கு என்ன உரைப்பது என்று எனக்கு விளங்கவில்லை. தாங்கள் அன்று எனக்கு உபதேசித்த வண்ணமே, 'அவர் வந்து சேருவார்;' 'அவர் வந்து சேருவார்;' என்றுண்மையான நம்பிக்கை கொண்டு, பக்தர் ஹிருதய கமல வாசனை அல்லும், பகலுமாய் அநவரதமும் துதித்து வந்தேன்; ஆயினும்,

'மங்குலைம்பதினாயிரம் யோசனை மயில்கண்டு நடமாடும்;
தங்குபானு நூறாயிரம் யோசனை தாமரைமுகம் விள்ளும்;
திங்கள் ஆதவற்கிரட்டியோசனையுறச் சிறக்குமரக் காம்பல்;
எங்கணாயினும் அன்பரா யிருப்பவர் இதயம் விட்டகலாரே.'

என்பது பொய்யாகாமல் அவர் ஞாபகம் முந்துகின்றது; முந்தி அகண்டாகாரத்தத்துவனை மறக்கும்படி செய்கிறது; என்செய்வேன்? நினைக்கும் பொழுதெல்லாம் அவர் எதிர்வந்து நிற்பதுபோல் தோன்றுகின்றது; அப்போது அது பிரமையினால் உண்டான தோற்றம் என்ற உணர்வு எனக்குண்டாவதில்லை; அதனால், அதனை, வாஸ்தவமான — சதையும், எலும்பும் பெற்ற என் அன்பர் உருவம் என்றே அணைய அருகி, ஏமாந்த தடவைகள் எவ்வளவோ? உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைகின்ற என் நண்பையே! சுக்கிரவாரமாகிய இன்று, அவரைப் பற்றிய ஞாபகம் வரத் தவறவில்லை;—மனம் நொந்தேன்;—தானாகவே பெருமூச்சுக்கள் கிளம்பின; என் பெருமூச்சுக்களைப் பகிர்ந்து கொள்வதுபோல எழுந்து—எழுந்து, விழுந்து—விழுந்து, மார்பில் விளங்கிக் கொண்டிருந்த மாங்கல்யத்தை நோக்கினேன்; அவரையில்லாவிட்டாலும் அவரால் முடியிடப்பட்ட அம்மாங்கல்யத்தையாவது முத்தமிடலாம் என்று, கழுத்தினின்று கழற்றாமல், கையில் எடுத்தேன்; முத்தந்தரப் போனேன்; அதிலும் என்னை ஆண்டவர் விளங்கினார்; அதை, என்னறியாமையாலே, உண்மையான அன்பர் ரூபம் என்றெண்ணி, 'அன்பரே! நாட்களாகி, வாரங்கள் நடந்து, மாதங்கள் சென்று, வருஷங்களும் ஆறு போய்விட்டனவே! என்னிடம் எய்தக் கூடாதா?' என்று வினவிப்

பிரலாபித்தேன்; 'பரந்தாமா! தனக்கு அபராதம் இயற்றிய இராவணனை யும் இரக்ஷித்த ஈசா! சிறுத்தொண்டர்க்குச் சிறுவனளித்த மாதொரு பங்கா! என்மேலிரங்கலாகாதா?' என்று வேண்டினேன்; 'இனியே தெமக்குன் அருள் வருமோ எனக்கருதி, ஏங்குதே, என் நெஞ்சம்— ஐயோ!' என்று பாடி உருகினேன்; விழுந்தேன் என்னையும் அறியாமல்; என்று பதில் பகர்ந்தாள். (தொடரும்.)

லால்குடி சே. கந்தசாமி,
தமிழ் ஆசிரியன், குடியாத்தம்.

---

## தியானம்.

(199-ம் பக்கத் தொடர்ச்சி).

ஆகாயம் எங்குமிருந்தும் நிர்மல ஜலத்திலேயே பிரதிபலிக்கும், அரணிக்கட்டையிலுள்ள அக்கினி எவ்வாறு காணப்படவில்லையோ கடைந்த பிறகே காணப்படுகின்றதோ அவ்வாறே ஆத்மா தன் தேகத்தி லிருந்தாலும் தெரிவதில்லை. தியானத்தாற் கடைந்த பிறகே அது காணப்படுகின்றது. புத்தியாதிகளுடன் கூடிய இந்திரிய வர்க்கத்திற்கு அதிருசியமான அவ்வஸ்துவை சங்கையின்றி அடைதல் எப்படிக்கூடும்? எனின், பிரம்மவஸ்துவின் பிரகாச நிமித்தம் புத்திவிருத்தி முதலியவைக ளின் பிரயோசனமில்லை. மேற்சொல்லிய லக்ஷணங்களோடு பிரம்மா காரமாக ஆகரித்த சாத்விகபுத்தி விருத்தியால் கேவலம் ஆவரண பங்க மாத்திர முண்டாகும். அவ்வாவரணமே அவித்யையாம். அது நீங்கவே பிரம்மவஸ்து சுவயமாகவே பிரகாசிக்கும். அதுவே (அச்சுவயபிரகாசமே) அதன் சாக்ஷாத்காரமாம். ஆதலால் எவன் தியானிப்பவனோ அவன் சம தமாதி சாதன சம்பன்ன வலிவால் கேவலம் சாத்விக அம்சமேயாகிக் கிரமமாகச் சாஸ்திரம் சற்சங்கம் சற்குரு என்பவற்றின் சகாயத்தால் சாத்விக அம்சமாகின்ற பிரம்மாகார விருத்தி பரம்பரையால் அறியாமை யை யகற்றிப் பூரணபிரம்ம சொரூபமே யாவன். காகதாளியம்போல் பாக்யவசத்தால் பூரணப் பிரம்மாகார விருத்தியால் அம்மறைவு நீங்கவே ஆத்மா தன்னைத்தானே காணும் (பிரகாசமாகும்). இதுவே அதன் நிச் சயம். ஆனால் அவ் வகண்டிதாகார விருத்தி அவசியம் வேண்டற்பால தாம். சகல நினைவையு மொழித்துச் சன்மாத்திரமா யவசேஷித்தலே அதன் உட்கிடையாம். தற்சொரூபமாயினும் தியானிப்பவன், தனக் கன்னியம்போல் தியேயமாக்கி, விடாமல் தொடர்ச்சியாகத் தியானிப்ப

தால் தற் சொரூபமான அது தோன்றவே தோன்றிவிடும், அப்படித் தன் சொருபத்தை தனக்கன்னிய தியேயமாக்கக் கூடுமோ? எனின்; கூடும். அபரோக்ஷ சிலா புத்தி தெய்வபுத்திக்குத் தடையாகாது. தனக் கன்னியமானது பரோக்ஷம்; அது பலனைத் தருமோ? எனின்; தரும். அது பலனைக் கொடுக்கும் சம்வாதிப் பிரமையின்கண் அடங்கும். அவ் விஷயத்தை ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள் கூறி யிருக்கின்றார். அது வரு மாறு:—

பிரமம் (மயக்கம்) சம்வாதி விசம்வாதி என இருவகைப்படும். சம்வாதிப் பிரமையாற் பிரவர்த்திக்கின்றவனுக்கு இஷ்டவஸ்து அடையப்படுகின்றது. இதுபோல் பிரம்ம தத்துவ உபாசகனுக்கு (தியா னம் செய்வோனுக்கு) பிரம்மத்தி னடைவாகிய மோக்ஷமுண்டாகின்றது. இதற்குத் தாபநீய உபநிஷத்தே பிரமாணமாம். மணியின் ஒளியில் மணிப் பிரமம் சம்வாதிப் பிரமம். தீப வொளியில் மணிப்பிரமம் விசம்வாதிப் பிரமமாம். அதாவது ஓர் வீட்டில் ஓர் அறையிலிருக்கும் தீபப் பிரபை (பிரகாசம்) வெளிவந்தது. அதில் மணிபுத்தி ஒருவனுக்காம். மற்றோர் அறையிலுள்ள இரத்தினத்தின் பிரபை வெளிவந்தது. அதில் மணிபுத்தி மற்றொருவனுக்காம். இரண்டும் மயக்கமே (பிரமமே) யானாலும் தீபத்தை மணியெனக்கொண்டு ஓடியவனுக்கு மணிகிட்டாது. மணி யெனக்கொண்டோடியவனுக்கு மணி கிடைக்கும். ஆகவே, மணிப் பிரமையில் மணிபுத்தி சம்வாதிப் பிரமமும், தீபப்பிரமையில் மணிபுத்தி விசம்வாதிப் பிரமுமாம். ஆவியைக்கண்டு புகையெனத்துணிந்து அதன் மூலப் பிரதேசத்தில் நெருப்பை அநுமானித்துச் சென்றவன் தெய்வ கதி யாய் நெருப்பை அடைகின்றான். அங்கே ஆவியைப் புகையெனல் சம் வாதிப் பிரமமாம். கோதாவரி ஜலத்தைக் கங்கை நீரென வெண்ணிப் புரோட்சித்துக் கொண்டால் விசுத்தியாமென்ற விடத்து, கோதாவரி ஜலத்தைக் கங்காஜலமென நினைத்தல் சம்வாதிப் பிரமமாம். சந்நிபாத தோஷத்தால் நாராயண ஸ்மரணம் சுவர்க்க சாதனமாம் எனத்துணிந்து சாதாரண புருஷனொருவன் நாராயணனை ஸ்மரித்து உயிர் துறந்தான். அவனுக்கு முத்தியுண்டானது. அதாவது, அநிச்சையாக ஸ்பரிசிக்கப்பட் டாலும் அக்னி தகிக்கின்றதுபோல், ஸ்ரீமந் நாராயணர் பாபசித்த முடையவர்களால் ஸ்மரிக்கப்பட்டாலும் அவர்களது பாபத்தைப் போக்கு கின்றார். இதற்குத் திருஷ்டாந்தம் அஜாமீளன். பாபாத்மகனான அவன் தனது பிள்ளையாகிய நாராயணனைக் கூப்பிட்டுக்கொண்டும் இட்டிக் கொண்டும் இறந்து முத்தி யடைந்தான். இக்கதை புராணப் பிரசித்த மாம். இங்குப் புத்திரனிடத்து நாராயண புத்தி சம்வாதிப் பிரமமாம். ஆதலால் பிரத்தியக்ஷம், அநுமானம், சாஸ்திரம் என்னும் மூன்றிற்கும்

விஷயமான சம்வாதிப் பிரமம் கோடிக் கணக்காம். அவ்வாறேப்பா விடில் மண், கல், கட்டை முதலியவைகள் தேவதைகள் எனல் எப்படி யாகும்? அவர்களால் இஷ்டவஸ்துவின் பெறுதி எப்படி யுண்டாகும்? ஸ்திரீ, புருஷன், பூமி, மேகம், சுவர்க்கம் இவைகளை அக்கினியாக உபாசிப்பதால் பிரம்மலோகப் பிராப்தியைக் கூறும் அர்த்தமும் வியர்த்தமாம்.

(தொடரும்.)

க. அரங்கநாதப் பிள்ளை,
வேதாந்த தர்க்க போதகாசிரியர், சென்னை.

---

## வேதாந்த சாஸ்திர சங்கிரக வினாவிடை.
## (இராம கிருஷ்ண சம்பாஷணை).

(220-வது பக்கத் தொடர்ச்சி).

இரா:—சிவம் அல்லது விஷ்ணு என்று கூறப்படுகின்ற பிரஹ்மத்தை நித்தியமென்று கூறாது, ஆத்மாவை நித்தியமென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

கிரு:—அநாத்மா (ஜடபதார்த்தம்) நித்திய மாகாதென்பதை யுணர்த்துதற்பொருட்டு ஆத்மா நித்தியமென்று கூறப்பட்டது. பிரஹ்மம் அநாத்மா வன்றென்பது சுருதி-ஸ்மிருதி-புராணம்-இதிகாச முதலியவற்றில் மிகு பிரசித்தமாம்.

இரா:—அங்ஙனமாயின் ஆத்மாவே பிரஹ்மமோ?

கிரு:—ஆம்.

இரா:—ஆத்மாவே பிரஹ்ம மென்பதெங்ஙனமாம்?

கிரு:—பிரமகீதை ஐதரேய உபநிடதார்த்த முரைக்கு மிடத்து

"சின்மாத் திரமா யுள்ள வெறுஞ் சிவனே திகழ்வா னியாதுக்கு,
முன்மாத் திரமும் வேறில்லை முற்று மவனே மொழிவுற்ற,
நன்மாத் திரமா யான்மாவென் றுரைக்கு நாமத் தினையுடையான்,
தன்மாத் திரமே யாகியவத் தன்மை யான சங்கரன்றான்."

என்று கூறுவதுணர்வார்க்கு ஆத்மாவே பிரஹ்மமாம்; பிரஹ்மமே ஆத்மாவாம்; பிரஹ்ம மென்பதும் ஆத்மா வென்பதும் ஒருபொருள் கிளவிகளா மென்பது நன்கு விளங்குவதாம்.

வியாபகமா யிருப்பது பிரஹ்ம மென்று கூறப்படுகின்றது; அங்ஙனமே ஆத்மாவுமாம். தேச (இட) த்தா லெதற்கு முடிவின்றோ அது வியாபகமாம். ஆத்மா பிரஹ்மத்திற்கு வேறு யிருக்குமாயின், அது தேசத்தால் முடிவுடையதாம். எது தேசத்தால் முடிவுடையதாகின்றதோ அது காலத்தாலும் முடிவுடையதாம்; பிரஹ்மமும் ஆத்மாவும் தேசத்தாலும் காலத்தாலும் முடிவுடையனவா மாயின், அவை படமும் (ஆடையும்) கடமும் போலக் கண்டமாய்க் காரியமாய் அநித்தியமா யொழிவனவாம். இக்காரணத்தால் ஆத்மாவும் பிரஹ்மமும் தம்முள் வேறுபாடுடையன வன்று மென்பது பெறப்படுவதாம். பிரஹ்மம் ஆத்மாவிற்கு வேறு யிருக்குமாயின், அஃ்தநாத்மாவும்; அநாத்மாவாயுள்ள கடம்பட முதலியன போல மித்தையுமாம். ஆகவே, ஆத்மாவைப் பிரஹ்மத்திற்கு வேருகக் கூறுவது எவ்வாற்றானும் பொருந்துவ தன்றாம். (இங்கு ஆத்மாவென்றது சீவசாட்சியா யுள்ள கூடஸ்தனை.)

இரா:—நான் என்னுஞ் சொல்லுக்குப் பொருளா யிருப்பதன்றோ ஆத்மா வென்பது ?

கிரு:—ஆம்.

இரா:—அது பிரஹ்மமாயின், ஒன்றாகவன்றோ இருத்தல்வேண்டும்? பலவாக விருப்பானேன் ?

கிரு:—பிரஹ்ம வடிவ ஆத்மா எப்போதும் ஆகாயம்போல ஒன்றாகவே யிருப்பதாம்; அவ்வாறிருக்கும் அஃது உபாதியால் பலவாகத் தோற்றுகின்றது. ஒன்றாகவே யுள்ள சந்திரன் கடநீர்-ஏரிநீர் முதலிய வுபாதிகளால் (பிம்பசந்திரன்-பிரதிபிம்ப சந்திரனெனப்) பலவாக விளங்குதல்போல, ஒன்றாகவே யுள்ள ஆத்மாவும் மாயை-அவித்தை முதலிய வுபாதிகளால் (ஈசுவரன்-சீவனெனப்) பலவாக விளங்குகின்றது. உண்மையில் பிரஹ்ம வடிவ ஆத்மா பலவாக விருப்பதில்லையாம். ஒரு பொருளைப் பலபொருள்போலக் காட்டுவது உபாதியாம்; அது முகம் பார்க்கும் கண்ணாடி, முகத்தைப் பலவாகக் காட்டுதல்போல்வதாம்.

நான் என்னும் சொல்லின் பொருள் மயக்க காலத்தில் தேகேந்திரிய முதலியவற்றிலும், தெளிவுக்காலத்தில் இவற்றைப் பற்றின்றி யறிகின்ற (பிரகாசிக்கச் செய்கின்ற) சீவசாட்சி யென்னும் கூடஸ்தனிலும் பொருந்துகின்றது. சீவசாட்சி அல்லது கூடஸ்தனென்றும் ஆத்மா ஒன்றாகவே யிருந்தும், ஸ்தூல-சூக்கும-காரண மென்றும் தேக பேதத்

தால் நான்-நான் என்று பலவாக விளங்குகின்றது. நான் நான் என்னும் போதம் (ஞானம்) சில பிராணிகளிடத்து வியக்தமா (வெளிப்படையா) யும், சில பிராணிகளிடத்து அவ்வியக்தமாயு மிருத்தலின், நீ யென்னும் முன்னிலையும், அவன்-அவள்-அது என்னும் படர்க்கையும், தன்மை யாகிய நானென்பதற்கு வேறாயுண்டென்பது எவ்வாற்றானும் பெறப்படுவ தில்லையாம்; ஆகவே, நானென்னும் தன்மைப் பொருளன்றி வேறெந்தப் பொருளு மில்லையா மென்பதுணராது, அவை யுண்டெனக் கொள்ளுதல் பிராந்தியே (விபரீத புத்தியே) யாம். அந்த நான் என்பது உண்மையில் பிரஹ்ம வடிவ ஆத்மாவாக விருத்தலின், அது பலவன்றாம்.

இரா:—நான் நான் என்னும் வியவகாரம் பிராந்தி யின்றிப் பலவாக நிக ழுதலின், ஆத்மா ஒன்றெனக் கொள்ளுதல் எங்ஙனமாம்?

கிரு:—நான் சிசு, நான் கௌமாரன், நான் யுவா, நான் விருத்த னென்னும் வியவகாரத்தில் நானென்னும் ஆத்மா சிசு முதலிய அவஸ்தா பேதம் நோக்கிப் பலவாக விளங்குவதன்றி உண்மையில் பல வாத லில்லையாம். நான் நான் என வியவகரிப்பது பற்றி ஆத்மா பலவாகுமாயின், சங்கரன், காளகண்டன், கபாலி யென் றற் றொடக்கத்தனவாக வியவகரிப்பது பற்றிச் சிவமும் பல வாதல் வேண்டும். அது பலவன்றென்பது மிகு பிரசித்தமா மன்றோ? நான் என்பதற் குண்மைப் பொருளா யுள்ள ஆத்மா சித்தா (அறிவு வடிவமா) யிருத்தலின், பலவாதல் கூடாது; பலவாமாயின், கடம் படம் முதலிய அநாத்மப் பொருள்போல அநித்தியப் பொருளாம்.

எது சித்தோ அது வியாபகமா யிருப்பதாம்; அதற்கு உற்பத்தி நாச மில்லையாம்; அது பிரஹ்ம வடிவ ஆத்மா அல்லது ஆத்ம வடிவப் பிரஹ்மமா மென்ப துணர்ந்தவர்க்கு நான் என்பதன் உண்மைப் பொரு ளாய ஆத்மா பிரஹ்மத்திற்கு வேறாயதன்றாம்; அதுவே நித்தியமா மென்பது நன்கு விளங்குவதாம். (தொடரும்.)

(இலக்கண இலக்கிய வேதாந்த தர்க்க போதகாசிரியர்)
கோ. வடிவேல் செட்டியார்,
சென்னை.

---

# தருமரும் கீரிப்பிள்ளையும்.

பாண்டவர்கள் துரியோதன னாதியரைக் கொன்று பட்டாபிஷேகம் செய்துகொண்ட பிறகு அசுவமேதம் என்னும் ஓர் யாகத்தைச் செய்தார்கள். அந்த யாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அதை மெச்சிப் புகழாதவர்கள் ஒருவரு மிலர். யாக காரியங்களெல்லாம் முடிந்த பிறகு தருமபுத்திரர் அநேக ராஜர்களும் ரிஷிகளும் தம்மைச் சுற்றிலு மிருக்க அழகிய ஆசனத்தி லமர்ந்திருந்தனர். அப்போது அவரெதிரில் ஒரு கீரிப்பிள்ளை வந்து நின்றது. அதன் உடலில் பாதி பொன்னிறமாயிருந்தது. வந்த அந்தக் கீரி தருமர் புரிந்த யாகத்தை இகழ்ந்து பேசிற்று. அங்கிருந்த முனிவர்கள் ஏன் இப்படி இழிவாகக் கூறுகிறாய் என்று அதை வினவினர். அதற்கு அது சொல்லத் தொடங்கிற்று:—

பெரியோர்களே! சத்துப் பிரத்தன் என்னும் ஓர் அந்தணரிருந்தார். அவர் தன் பத்தினி புத்திரன் மருமகள் இவர்களோடிருந்து நல்லறமாகிய இல்லறத்தை முறைப்படி நடத்திவந்தார். அப்படி யிருக்க, அவர்கள் நாட்டில் கொடிய பஞ்ச முண்டாயிற்று. மனிதரை மனிதர் பிடுங்கித் தின்னும்படியான நிலைமை வந்துவிட்டது. பசி பசி சோறு சோறு என்னும் கூக்குரல் எங்கும் மிருந்தது. தழைகளையும் வேர்களையும் கிழங்குகளையும் தின்று சிலநாட்கள் போக்கினர்கள். பின்பு அவைகளும் கிடையாவாயின.

இந்நிலைமையில் அந்த நால்வரும் நான்கு நாள் பட்டினி. பசி பொறுக்கமுடியாமல் வெளியில் புறப்பட்டும் போகலாயினர். வழியில் ஓர் வயலிலிறங்கிப் போகையில் வெண்மையாகிய ஒருவகைப் புல்லரிசி உதிர்ந்து கிடைப்பதைக்கண்டு ஒவ்வொன்றாகப் பொருக்கிக்கொண்டுவந்து பொரிமாவாக்கி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு நால்வரும் பங்கிட்டுக்கொண்டு சாப்பிடச் சித்தமா யிருந்தனர். அந்த சமயத்தில் ஓர் பெரியவர் ஐயா! பசி பொறுக்கமுடியவில்லை என்று கூறிக்கொண்டு களைப்பினால் நிற்கவும் முடியாமல் உட்கார்ந்தார் வெளிப்புறத்தில். அந்த சப்தத்தைக் கேட்டதும் சத்துப்பிரத்தர் அளவிலா ஆனந்த மடைந்து அவரை உள்ளே அழைத்துவந்து அநேக உபசாரங்களைச் செய்து தன் பங்கு பொரிமாவை அவருக்குக் கொடுத்தார். அவர் அதைச் சாப்பிட்டு ஐயோ பசி அதிகமாய்விட்டதே. இதைச் சாப்பிடாம லிருந்தால் நன்றாயிருக்குமே என்று வருந்தினர்.

அதைக்கண்டு அந்த சத்துப் பிரத்தர் விசனம் மேலிட்டவராய் இன்னசெய்வதென் றறியாமல் திகைத்தார். அவரது மனைவி அவரைத்

தேற்றி தன் பங்குமாவைக் கொடுத்தாள். அதைத்தின்றும் அவர் பசி தணியவில்லையே யென்றழுதார். இப்பொழுது என்ன செய்வார் ஏழை பிராமணர். மிகுந்த கவலைக்குள்ளானுர். அதை யறிந்த அவர் புத்திரன் எதிரில்வந்து தந்தையே! என் பங்கு மாவையும் கொடுக்கிறேனென்றுர். அதை வாங்க அவருக்குப் பிரியமில்லாதிருந்தது. அதைக்கண்ட அப் புத்திரன் அப்பா! இதற்காக நீங்கள் யோசிக்கவேண்டாம். ஆபத்திற்குத வாதபிள்ளை இருந்தாலென்ன! இறந்தாலென்ன! சமயத்திற்கு என்னை விற்கவும் பாத்தியமிருக்கிறதே! அப்படியிருக்க இப்பொரிமாவிற்குத் தானு பாத்தியமில்லாமற் போய்விட்டது. சோறும் துணியும் நாளைக்கே அகப்படும். இப்பேர்ப்பட்ட அதிதி அகப்படுவாரா? பிறந்த நான்முதல் நாம் சாப்பிட்டுக்கொண்டுதானே யிருக்கிறோம். இன்றைக்கொருநாள் சாப்பிடாமலிருந்தால் இறந்து விடுவோமா? அப்படிப் போனுல்தான் போகட்டுமே! என்றைக்கிருந்தாலும் ஒருநாளைக்குச் சாகவேண்டியது தானே! ஒருவருயிரைக் காப்பாற்றுவதற்காக இறப்பது விசேஷமல்லவா! யோசனை யின்றி இதைவாங்கிக் கொடும் என்று வேண்டினுன். அதன் படி அதையும் வாங்கிக் கொடுக்க கிழவர் அதையும் தின்றுவிட்டு அரை வயிறும் நிரம்பவில்லையே யென்று அலறினுர்.

அப்பொழுது மருமகளோடிவந்து தன் பங்குமாவையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினுள். அதையும் பிராமணர் வாங்கிக் கொடுத்தார். அதையும் தின்று பசியாறி வந்தகிழவர் சந்தோஷத்துடன் அந் நால்வரையும் ஆசீர்வதித்துப் போய்விட்டார்.

கேளும் தருமபுத்திர மகாராஜனே! இந்த அதிசயத்தைக் கண்ட நான் அவர்களை யடுத்திருந்தேன். அதனுல் என் உடலிற் பாதி தங்கமய மாயிற்று. மற்றப்பாதி யுடலும் பொன்னுக வேண்டுமென்று அநேக தேசங்கள்தோறும் சென்று பல பெரியோர்களுக்குத் தொண்டு புரிந்தும் வந்தேன். ஒரு பயனுமில்லை. அதே எண்ணத்தோடு இங்கும் வந்தேன். பயன்காணேன்.

திருத்துகுரு பூமியிடை சேர்முனிவன் உஞ்ச
விருத்தியினி லேகொணரு மாவினை மிகுந்த
அருத்தியுட னே அதிதி யார்க்கருள் பலந்தான்
வருத்தமற நீ செயும் மகத்தில் உளதாமோ.

தன்னைத் தேடிவந்த அதிதிக்குப் பொரிமாவைக் கொடுத்துப் பசியாற்றிய அந்தப் பிராமணருடைய தவத்திற்குச் சமமான அப்பேர்ப்பட்ட நல்ல தருமங்களைக் காணேம். உன் தருமப்பயனும் இவ்வளவுதானு? உன்னைத்

தருமராஜனென்றும் அருமையான யாகத்தைச் செய்தாயென்றும் யாவரும் புகழ்ந்து பேசினர்களே! அந்த முனிவர் இட்ட பிச்சைக்குச் சமமாக வில்லையே. சீ! இது கெட்டதுபோ' என்று சொல்லிக்கொண்டே அந்தக் கீரியானது ஓடிவிட்டது.

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## மாதரும் குடும்பங்களும்.

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

(மாமியாரும் மருமகளும்.)

எந்த வகையிலும் மருமகளை இழிவு படுத்துவதே மாமியாரின் வேலை. அவள் தன் கணவனுடன் பேசலாகாது அவனெதிரில் நிற்கவுங் கூடாது. வேசிக்கு அடுக்குமா இந்தவேலை. வெட்கமில்லாமல் நிற்பதைப்பார். தலையணை மந்திரம் தலைக்கேற்றுகிறாள். அவனை மயக்கப் பார்க்கிறாள் என்று பலவாறாகப் பாட ஆரம்பித்து விடுவாள் மாமியார். தன் மகள் மாத்திரம் யாதொரு குறையுமில்லாமல் தன் கணவனோடு கூடிக்குலாவி சந்தோஷமா யிருக்கவேண்டுமென்று பலவகைத் தந்திர உபாயங்களைச் செய்கிறவர்கள் மருமக்கள்மாரை அடிமைகளினும் தாழ்ந்தவராகப் பார்க்கின்றனர். இவ்வாறு செய்வதெல்லாம் முன்னே நாம் சொன்னபடி எங்கே தன் மகன் தன்மேலுள்ள பிரியத்தைவிட்டுப் பெண்சாதியின் சொற்படி நடக்க ஆரம்பித்து விடுகிறானோ என்னும் பயத்தினாலேயே.

தாயார் இவ்வாறு தன் வசப்படுத்த நினைத்து ஆதிக்கம் செய்வதைக் கண்ட மருமகளும் கணவன் தன் வசத்திலிருந்தால் இத்துன்பமுண்டாகாது மாமியின் கொட்டமு மடங்கிவிடும் என்று யோசித்து அதற்கான பல முறைகளை அனுஷ்டிக்கத் தொடங்குகிறாள். வேறொன்றினால் முடியாவிட்டால் மருந்து மாயங்களைக் கொண்டேனும் சரிப்படுத்த நினைக்கிறாள். இது சகஜமே. மருந்து வைத்தாளோ இல்லையோ தன் மகன் ஏதாவது மனைவியினிடம் அன்புகொண் டிருப்பதாகத் தெரிந்ததோ "மருந்து வைத்துவிட்டாள் மருந்து வைத்துவிட்டாள்" என்று ஊரெல்லாம் தூற்றி அம்மருந்தை யெடுக்க இவள் வேறுமருந்து கொடுக்க ஆரம்பிக்கிறாள். இந்த நிலையில் புருஷர்கள் படும் பாட்டை என்னென்று சொல்வது! இக்காரணங்களாலல்லவா பெண்கள் கொடியவர்கள் என்று பேருண்டாய்விட்டது.

பிள்ளைகள் தங்கள் தாய்மாரின் தகாத செய்கைகளை உணர ஆரம்பித்து விட்டனர். பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்னும் மேல் நாட்டு நாகரீகம் மெள்ள உள்ளே நுழைந்துவிட்டது. பெற்றோர் பார்த்துப் பெண்ணைத்தேடி பிள்ளைகளுக்கு விவாகம் செய்யும் முறை மாறிப் பிள்ளைகள் தாங்களே நேரில் பெண்ணைப்பார்த்து மணந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர். மாமிகளின் அதிகாரமும் செல்வாக்கும் அஸ்தமிக்கத் தொடங்கியது. ஆனைக்கொருகாலம் பூனைக்கொருகாலம். மருமக்கள்மாரின் அதிகாரம் சிறுகச் சிறுக தலையெடுக்கலாயிற்று. பிள்ளை பெரியவனானபின்பு அவனுக்குப் பலவிதங்களிலும் மனைவியின் உதவி தேவையே யொழியத் தாயின் உதவி தேவையில்லை யல்லவா? அதனால் பிள்ளைகள் பெற்றோரின் பாராமரிப்பில் அவ்வளவு அக்கறை பாராட்டுவதில்லாமற் போயிற்று. உங்களுக்கு வேண்டியதென்ன? உடையும் உணவும்தானே! இருப்பதைச் சாப்பிட்டுக்கொண்டு இருக்குமிடம் தெரியாமலிருங்கள். மற்றக்காரியங்களில் நீங்கள் நுழையவேண்டாம் என்னும் உத்தரவு சாதரா செய்யப்படுகின்றது. தங்கள் சாய்கால் குறைந்துவிட்டபோது அவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படியாவிட்டால் காரியம் நடவாது. எல்லாம் தலைகீழ்பாடம். வண்டி ஓடத்தில் ஓடம் வண்டியில்.

மனித சுபாவந்தானே! மருமக்களின் அதிகாரம் அதிகமாய்விட்டது. "மாமியின் கொடுமை" என்று முன்னே பாடினவர்கள் இப்போது 'மருகியின் கொடுமை' என்று பாடவேண்டிய நிலைமை வெகு விரைவில் வந்துவிட்டது. கொண்டவன் பலமே இதற்குக்காரணம். இவ்விதம் மாமிகளைக் கொடுமையாக நடத்தும் மருமக்களுக்கு நாம் சொல்லவேண்டியது ஒன்றுதான். மாமி மருமகளாகமாட்டாள்; ஆனால் மருமகள் மாமியாராகாமலிருக்க முடியாது. தன் மாமியாருக்கு வந்ததே தான் மாமியாராகும்போது தனக்கும் வரும் என்பதை அவர்கள் மறக்கலாகாது. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சிறுகதை கூறுவோம்.

ஓர் ஊரிலிருந்த ஒருகிழவி வெகு கஷ்டப்பட்டுத் தன்பிள்ளைக்குக் கலியாணம் செய்துவைத்தாள். மருமகள் வீட்டிற்கு வந்து குடித்தனம் செய்ய ஆரம்பித்ததும் மாமியைப்பார்த்து 'நீ சாகக்கூடாதா? இன்னும் ஏன் இருக்கவேண்டும்' என்று கூறி பலவிதமாகத் திட்டுவாள். அதற்கு அவள் அடியம்மா! உன்வயிற்றில் இரண்டு பிள்ளைகள் பிறந்தால் அவர்களைப் பார்த்துவிட்டு இறந்துபோகிறேன். அதுவரையில் என்னை வைத்துக்கொண்டிரு என்று வேண்டிக்கொள்வாள். சில மாதங்கழித்து அவளுக்கொரு புத்திரன் பிறந்தான். அப்பொழுது மருமகள் கிழவியைப்பார்த்து இனியென்னவேலை? செத்துத் தொலையலாகாதா என்றாள்.

அதற்கு அவள் அம்மா குழந்தையின் அழகைப் பார்க்கவேண்டாமா? அவன் தளர்நடையையும் மழலைச் சொற்களையும் கேட்டு அவனுக்குக் காதுகுத்தி பள்ளியில் வைக்கிறவரைக்கும் இருக்கிறேன். அவைகளைப் பார்த்துவிட்டால் போதும். அப்புறம் நான் சந்தோஷமாய்ச் சாவேன் என்ருள். அந்தக்காரியங்களும் முடிந்தன. மறுபடியும் மருமகள் முன் போலவே கேட்டாள். அப்போது கிழவி பையனுக்குக் கலியாணம் செய்து பார்த்துவிட்டால் போதும். அதற்குமேல் நான் ஒரு நிமிஷமும் இருக்கமாட்டேன். அதுவரையில் பொறுத்துக்கொள்ளம்மா என்று வினயமாக வேண்டினள். விவாகமும் முடிந்தது. அப்பொழுதும் கிழவி கலியாணமாயிற்று. அவர்கள் இருவரும் குடித்தனம் செய்வதைப் பார்க்கவேண்டாமா? அந்தப்பெண் சம்சாரம் செய்யவந்த பிறகு இங் கிருக்கமாட்டேன் உடனே இறந்துபோவேன். இது நிச்சயம் என்ருள். சில மாதங்களுக்குப் பிறகு அந்தப்பெண்ணும் வந்துவிட்டாள். உடனே சாகும்படி மாமியாரைக் கேட்டாள் மருமகள். அப்பொழுது அவள் அம்மா மருமகளே! மருமகள் வந்தபிறகு மாமியார் பிழைத்திருக்கலா காது ஆகையால் நீ என்னை இறந்துபோகச்சொன்னுய். இப்பொழுது உன் மருமகள் சம்சாரத்திற்கு வந்துவிட்டாள். ஆகையால் நீயும் சாக வேண்டியதே. நாம் இருவரும் சேர்ந்து செத்துப்போவோம் வா என் ருள். அதைக்கேட்ட மருமகள் வெட்கமடைந்து அதுமுதல் அவள் பேச்சுக்குப் போவதையே விட்டு விட்டாள்" என்று ஒருகதை வழங்கு கின்றது.

ஆதலால் மருமகள் 'தன் மாமிக்குத் தான் செய்வதே, தான் மாமி யாருங்காலத்தில் தன் மருமகளும் தனக்குச் செய்வாள்' என்பதை மறவாமல் மாமிகளிடம் அன்பாய் நடந்துகொள்ளல் வேண்டும்.

(தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## ஏன் மாமிசம் புசிக்கலாகாது?

(பிராம்வேல் பூத் (Bramwell Booth) என்னும் ஆங்கிலேயர் எழுதிய வியாசத்தின் மொழி பெயர்ப்பு.)

* * * * * *

அடிக்கடி என் நண்பர்கள் கேட்கும் ஒரு கேள்விக்கு மாத்திரம் சுருக்கமாக விடையளிக்க முயலுகிறேன். அதாவது:—நான் ஏன் மறக்

கறி ஆகாரத்தை விசேஷமாகப் போதிக்கிறேன்?' என்பதே. என் போதனைக்குக் காரணங்கள் சிலவற்றைக் கூறுகிறேன்.

(1) நானே சாகபக்ஷணியா (மரக்கறி ஆகாரத்தையே தின்பவனா) யிருந்து மிகவும் நன்மையை யடைந்திருக்கிறேன். ஏனெனில் நான் ஒருகாலத்தில் பத்துவருஷத்துக்குமேல் இவ்விரதத்தை விடாமல் கைக்கொண்டிருந்தேன்.

(2) விவிலிய (பைபில்) நூலின்படி, கடவுள் ஆரம்பத்தில் மனிதனுக்கு புல் பூண்டு செடி கொடிகளையே ஆகாரமாக ஏற்படுத்தினார்.

"கடவுள் மனிதனைப் பார்த்து 'அப்பா! நான் உனக்காக இவ்வுலகிலுள்ள செடி கொடிகளில் ஒவ்வொன்றினுடைய விதையையும் அளித்திருக்கிறேன். அவ்விதையுடன் கூடிய பழங்களையுடைய மரங்களே உனக்கு ஆகாரமாகுக' என்று சொன்னார்." என்று ஜெனஸிஸ் முதல் அத்யாயம் 29-வது வாக்கியத்தில் காணப்படுகிறது.

(3) கந்த மூலாதிகளால் தயாரிக்கப்படும் ஆகாரமே பரிசுத்தம் கற்பு இவைகளுக்கு ஆதாரமாகவும், சிறுவர்களையும் மற்றும் அனைவரையும் கைக்கொள்ளும் ஆசை கோபம் காமம் முதலியவைகளை அடக்கும் திறமையை உண்டுபண்ணக் கூடியதாகவும் இருக்கிறது.

(4) சைவ ஆகாரமே குறையாத ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும் சாதகமாக இருக்கிறது. மாமிஸ ஆகாரத்தை அறவே ஒழித்து விடுவார்களேயானால் மனிதர்களில் தீராவியாதிகளையுடைய சிலரைத் தவிர மற்றெல்லோரும் இப்பொழு திருப்பதைவிட அதிக உத்ஸாக முடையவர்களாகவும் அதிக சுருசுருப் புடையவர்களாகவும் இருப்பார்களென்று நான் நம்புகிறேன். எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவைகளை மற்றெல்லா ஜாதியாரையும்விட மிகப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளச் சக்தியுடையவர்களெனப் பெயர்பெற்ற 'ஸ்பார்டன்' தேசத்தார் சாக பக்ஷணிகளே. 'ரோம்' தேசத்தார் உலகத்தை ஜெயித்துக்கொண்டு வந்த காலத்தில் அத்தேசத்திலிருந்த போர்வீரர்களும் சாக பக்ஷணிகளே.

(5) இப்போது மாமிச பக்ஷணம் செய்வதால் அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்துவிட்டுக் கஷ்டப்படும் பதினாயிரக்கணக்கான நம் தேசத்து ஏழை ஜனங்கள் மாமிசத்திற்குப் பதிலாக பழம் காய்கறி முதலிய மலிவான பதார்த்தங்களை உண்டு ஜீவிப்பதால் சுகமாக ஜீவிப்பதோடும்கூட, நாளடைவில் பணம் சேர்த்துவைத்து ஏழைகளுக்கும் கடவுளுக்காகவும் கொஞ்சம் பணம் அதிகமாகச் செலவுசெய்யவும் கூடும்.

(6) கோதுமை, தானியங்கள், பட்டாணி, வேர்கடலை முதலியவைக ளால் தயாரிக்கப்படும் ஆகாரமானது, மாமிச ஆகாரத்தைவிடப் பதின் மடங்குக்குமேல் மலிவானது. மாமிசத்தில் பாதிஎடைக்குமேல் தண் ணீர் இருக்கிறது. அத்தண்ணீருக்கும் மாமிசத்தைப்போல விலை கொடுத்து வாங்கவேண்டி யிருக்கிறது. தயிர், பால், வெண்ணெய் முத லியவைகளுடன் சாப்பிடும் (சைவ) ஆகாரம், மாமிசம் காய்கறி முதலிய வைகளுடன் தயாரிக்கப்படும் ஆகாரத்தைப்போல நாலிலொருபங்கே விலையுள்ளதாகும்.

(7) கந்த மூலாதிகளாலாகும் ஆகாரத்தை உபயோகிப்பதால், யா தொரு பயனுமின்றி இப்போது உட்கொள்ளப்படும் ஏராளமான மாமி சம் நஷ்டமாகாதபடி ஈடுக்கப்படும்.

(8) மாமிசம் சாப்பிடுவதே மதுபானம் அதிகமாவதற்கு ஓர் காரண மாக இருப்பதால், சைவ ஆகாரமே குடியை ஒழிப்பதற்கு ஓர் அடைக்கும் தாள்போலாகும். ஒரு கெட்டவஸ்துவில் ஆசை செல்லுவதால் மற்ற கெட்ட வஸ்துக்களிடத்திலும் அவ்வாசை பரவுகிறது.

(9) சாக பக்ஷணம் (சைவ ஆகாரம்) விடா முயற்சிக்கும் கடின வுழைப்புக்கும் ஆதாரமாக இருக்கிறது. மாமிச ஆகாரமோ, சோம்பல், தூக்கம், கொழுப்பு, ஊக்கமின்மை, அஜீரணம், மலக்கட்டு முதலியவை களையும் அதிகரிக்கச் செய்கிறது.

(10. மரக்கறி ஆகாரத்தை உட்கொள்ளுவதனுல் ஆயுளும், ஆரோக் கியமும், சுகமும் அதிகரிக்கிறதென்று இப்பொழுது நிரூபிக்கப்படுகிறது. இதற்கு நானே அனேக உதாரணங்களை நிதரிசனமாகப் பார்த்திருக்கி றேன். நீண்டகாலம் ஜீவித்திருந்தவர்களிற் பெரும்பாலோர் இளம்பருவ முதல் கனிவர்க்கங்களையே தங்களுடைய (முழு ஆகாரமாக இல்லாவிடி னும்) முக்கிய ஆகாரமாகக் கொண்டவர்களாக இருக்கக்காணலாம். இவ் விஷயம் மிகவும் ஆராயத் தக்கது.

(11) மனித சரீரத்திலுள்ள ஜீரணக் கருவிகள் மாமிச ஆகாரத்திற்கு ஏற்றவையாக அமைக்கப்படவில்லை. இறைச்சியில் பெரும்பாகம் அந்த ஜந்து கொல்லப்பட்ட காலத்தில் அதன் சரீரத்திலிருந்து வெளிப்படத் தயாராக இருந்த அசுத்தமே. இந்த அசுத்தமானது மனிதனின் குடலின் வழியாக ஜீரணிக்கப்படாமல் ரத்தத்துடன் கலந்து விடுவதினுல் சில் வாதம், கணுவாய்வு, அஜீரணம் முதலிய பல வியாதிகள் உண்டாகின்றன.

(12) எந்த இடத்திலும்—முக்கியமாக உஷ்ணமான தேசங்களிலும்—கோடைகாலத்திலும் மாமிசத்தைச் சமைத்து சாப்பிடும்வரையில் கெடாதபடி ருசியுடன் வைத்திருப்பது மிகவும் கடினம். ஆகையால் இறைச்சியில் பெரும்பாகம் கெட்டு அழுக ஆரம்பித்தபிறகே உட்கொள்ளப் படுகிறது. இவ்விதம் அது கெட ஆரம்பித்து வெகு நாழிகைவரையில் அக்கெடுதலின் அடையாளமாக யாதொன்றும் அடையாளமாகத் தோன்றுவதில்லை யாகையால் அதன் வெளித்தோற்றத்தினலாவது வாசனையினலாவது அது ஆரோக்கியமானதுதான் என்று கண்டறிய முடியாது.

(13) மனிதனுடைய ஆகாரத்துக்காகக் கொடுக்கப்படும் இறைச்சி பெரும்பாலும் கெட்டுப்போயிருப்பதால் அதில் வியாதிகளை யுண்டாக்கக் கூடிய கிருமிகள் இல்லை யென்று நிச்சயிப்பது அசாத்தியம். கசாப்புக் கடையில் விற்கப்படும் மாமிசத்தில் பெரும்பாகம் கிழ மிருகங்களின் மாமிசமாகவாவது அல்லது வியாதியினல் 'உபயோகமில்லை' யென்று விற்கப்பட்ட மிருகங்களின் மாமிசமாகவாவது இருப்பதை நாம் நன்ருய் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

(14) சென்ற நூறு வருஷங்களாக காசரோகம் அதிகரித்திருப்பதற்கு புலாலுண்ணுதலே காரணமென்று நான் நம்புகிறேன். புலால் விலக்கப்படுமானல் இவ்வியாதிகள் வராதபடி தடுப்பதற்கு உதவியாயிருக்கும்.

(15) புலாலுண்பதால் அனேக கொடுமையான ரோகங்கள் பற்றிக் கொள்ளுகின்றன. இந்த ரோகங்கள் உடனே உயிருக்கு ஆபத்து விளைக்காவிடினும் சொல்லொணு கஷ்டத்தையும் விளைக்கின்றன. இந்த ரோகங்களில் சில மலக்கட்டு, மூலம், அரிப்பு, சொரி, வயிற்றுக்கடுப்பு, ஜுரம், தலைவலி முதலியன. சாகபக்ஷணிகளாக இருப்பதால் இவ்வியாதிகள் முழுவதும் தீராவிடினும் அவ்வளவுகஷ்டத்தைக் கொடுக்கமாட்டா.

(16) மனிதனுடைய ஆகாரத்துக்காக எவ்வளவு கோடிக் கணக்கான மிருகங்கள் தூரதேசங்களுக்கு கப்பல் மூலமாகவும் ரயில் மூலமாகவும் ரஸ்தா மூலமாகவும் வெகுவாக விரட்டப்பட்டும் இம்சிக்கப்பட்டும் கொலைக்களத்துக்குக் கொண்டுவரப் படுகின்றன. ஐயோ பாவம்! கடவுள் மனிதனிடத்திலாவது மிருகத்தினிடத்திலாவது இம்சையைப் பொறுத்துக்கொள்ளுவாரா?

(17) கசாப்புக் கடைகளில் மிருகங்களைக் கொலைசெய்வதில் எவ்வளவு கோரமான அக்கிரமங்கள் நடக்கின்றன? எவ்வளவுதான் ஜாக்கிரதையுடன் செய்வதா யிருந்தாலும், கொலை என்பது கோரமான பாவ

மல்லவா! யாதொரு நல்லறிவு மின்றி கொஞ்சமேனும் இரக்கமென்பது மில்லாமல் வெகு அலக்ஷியமாகவும் குரூரமாகவும் லக்ஷக்கணக்கான மிருகங்களை ராக்கதர்களாகிய இந்த கசாப்புக்கடைக்காரர்கள் கொலைசெய்வது நமக்குத் தெரிந்தவிஷயமல்லவா? ஐரோப்பாவில் ஒவ்வொரு மணிக்கும் பதினாயிரம் பன்றிகள் மனிதனின் ஆகாரத்துக்காகக் கொல்லப்படுகின்றன வென்றால் இதைவிட அக்கிரமமான செயல் ஏதேனும் இருக்கக் கூடுமோ?

(18) மிருகங்களைக் கொலை செய்கின்றவர்கள் ஜீவிரக்கம் முதலிய நற்குணங்களை இழந்து கடினமனதுடன் ராக்கதர்களாக ஆகிறார்கள். "நல்லுணர்ச்சியும் மனச்சாக்ஷியுமுள்ள ஒவ்வொருவனும் இவ்விதம் இவ் வாயில்லா ஜீவன்கள் வெகுதூரம் கொண்டுபோகப்படும்பொழுதும் கொல்லப்படும்போதும் அவைகள் அனுபவிக்கும் கஷ்டத்தையும் அவைகளின் மரணரோதனையையும் அவைகளிலிருந்து கொட்டும் உதிரத்தையும் மற்றும் இரணகளத்தைச் சேர்ந்த கோரமான காட்சிகளையும் கண்டு வெறுக்காமலிருக்க முடியாது."

(19) கடினமாக வேலைசெய்வதற்கு மாமிச ஆகாரம் அவசியமென்பதேயில்லை. இவ் வுலகத்திலுள்ள எல்லாவேலைகளிலும் பெரும்பாகம், சாகபக்ஷணிகளாகிய குதிரை, கழுதை, ஒட்டகம், காளைமாடு முதலிய மிருகங்களாலேயே செய்யப்படுகிறது.

இந்த விஷயம் நம்முடைய உத்தியோகஸ்தர்களால் அவச்யம் வெகு கவனத்துடன் ஆராயப்படவேண்டுமென்று நான் நம்புகிறேன். இவ்விஷயமானது நம்முடைய ஆரோக்கியத்தையும் சுகத்தையும் மாத்திரம் ஸம்பந்தப்பட்டதல்ல; பொதுஜனங்களுக்கு இதனால் ஏற்படும் கெடுதல்களையும் ஸம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ஏனெனில் இதுவரையில் கிருஸ்துவின் ஊழியர்களெனப் பெயர் பூண்டவரும் கிருஸ்தவர்களைப் பற்றிக்கொண்டிருக்கும் இந்த ஸ்வயநலப்புலால் பைத்தியத்திலிருந்து அதன் வலையில் சிக்கிக்கொள்ளாத பரிசுத்த ஜனங்களையாவது இனி இதுபற்றிக் கொள்ளாதபடி பார்த்துக்கொள்ளவேண்டுவது அவசியம். "நீ சாப்பிடுகிறதும் சரி, பருகுவதும் சரி, செய்கிற செய்கையும் சரி, எதுவும் கடவுளின் நாமத்துக்கும் கீர்த்திக்கும் ஏற்றதாக இருக்கட்டும்" என்று சொல்லிய நம் குருவின் வாக்கியத்தை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கக் கடவோம்.

அன்பர்களே, மேலேசொல்லிய இவ்விஷயங்களைப்பற்றி யோசியுங்கள். அப்பொழுதுதான் உண்மை புலப்படும் நலமுண்டாகும்.

சைவன்.

# இலக்கண வினவிடை.

(176-ம் பக்கத் தொடர்ச்சி.)

வினு:—சார்பெழுத்துக்க ளெவையாம்?

விடை:—(1) உயிர்மெய், (2) உயிரளபெடை, (3) ஒற்றளபெடை, (4) ஆய்தம், (5) குற்றியலிகரம், (6) குற்றியலுகரம், (7) ஐகாரக் குறுக்கம், (8) ஔகாரக் குறுக்கம், (9) மகாரக் குறுக்கம், (10) ஆய்தக்குறுக்க மென்பனவாம்.

வினு;—சார்பெழுத்தின் பெயர்க ளெவையாம்?

விடை:—புல்லல், சார்தல், புணர்தல் என்பனவாம்.

வினு:—உயிர்மெய் எழுத்து எத்தனையாம்?

விடை:—இருநூற்றுப் பதினாறும்.

வினு:—அஃது எவ்வாறு இருநூற்றுப் பதினாறும்?

விடை:—அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ என்னும் உயிர் பன்னிரண்டும், க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன் என்னும் மெய் பதினெட்டின் மீதும் தனித்தனி யேற இருநூற்றுப் பதினாறும்.

அவை வருமாறு:—

க்:—(1) க-கா-கி-கீ-கு-கூ-கெ-கே-கை-கொ-கோ-கௌ என வரும்.

ங்:—(2) ங-ஙா-ஙி-ஙீ-ஙு-ஙூ-ஙெ-ஙே-ஙை-ஙொ-ஙோ-ஙௌ என வரும். (இவற்றுள் ஙகரம் தவிர ஏனையன சொற்களில் வருவதில்லையாம். 'சிங்ஙுவை' என வருதலுமுண்டு. அது வடமொழியாம்.)

ச்:—(3) ச-சா-சி-சீ-சு-சூ-செ-சே-சை-சொ-சோ-சௌ என வரும்.

ஞ்:—(4) ஞ-ஞா-ஞி-ஞீ-ஞு-ஞூ-ஞெ-ஞே-ஞை-ஞொ-ஞோ ஞௌ எனவரும்.

ட்-ண்-முதலியனவும் இங்ஙனமே வரும்.

வினு:—உயிரளபெடை எத்தனையாம்?

விடை:—இருபத் தொன்றும்,

**வினு:**—அஃதெவ்வாறு இருபத்தொன்ரும்?

**விடை:**—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் நெட்டெழுத் தேழும் மொழிக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் (தத்தம் மாத்திரையி (உச்சரிக்கும் அளவி) ல் மிக்கொலித்தலாகிய அளபெடுத்தலால், இருபத்தொன்ரும்.

**வினு:**—இவ் வளபெடை எவ் வழக்கில் வரும்?

**விடை:**—செய்யுள் வழக்கில் வரும்.

**வினு:**—செய்யுள் வழக்கில் வருவதற்குக் காரணமுண்டோ?

**விடை:**—உண்டு.

**வினு:**—அக்காரணம் யாது?

**விடை:**—செய்யுள் ஓசை குறைந்து வருவதேயாம்.

(செய்யுளில் ஓசை குறையுமிடத்து இவ்வளபெடை வரும். சிறு பான்மை உலக வழக்கிலும் வரும்.)

**வினு:**—செய்யுளில் ஓசை குறைந்த விடத்து அவ்வோசையை நிறைக்க ஆ-ஈ முதலிய நெட்டெழுத் தேழும் தத்தம் அளபிறந்து ஒலிக்கின்றன வென்பதை யறிதற்குரிய அடையாள மென்ன?

**விடை:**—வரிவடிவில் அந் நெட்டெழுத்திற்கினமான குற்றெழுத்துக்கள் வருதலேயாம்.

**வினு:**—ஔகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வருதலின்மை யின் அஃதெவ்வாறு மொழிக்கு இடையிலும் கடையிலும் அளபெடையாம்?

**விடை:**—ஔகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் அளபெடை யாக வருவதில்லை யென்பது உண்மையே. அவ்விரண்டற் கும் பிரதியாக இன்னிசை நிறைக்கவரும் உயிரளபெடை யும் சொல்லிசை நிறைக்கவரும் அளபெடையும் சேர்க்க, உயிரளபெடை இருபத்தொன்ரும். இதனுல் (1) செய்யு ளிசை நிறைக்கவந்த அளபெடை 19, (2) இன்னிசை நிறை க்கவந்த அளபெடை 1, (3) சொல்லிசை நிறைக்கவந்த அள பெடை 1 என உயிரளபெடை மூன்று வகையா மென்ப தறிதற் பாற்ரும்.

**வினு:**—இவ்வளபெடைக்கு உதாரணங்க ளெவையாம்?

விடை:—(1) "ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்."

(2) "உறஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறஅய் வாழிய நெஞ்சு."

(3) "அனிச்சப்பூக் கால்களையான் பெய்தா ளுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை."

இவற்றுள் மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் உயிரளபெடை வந்தவாறு காண்க.

இவை செய்யுளிசை நிறைக்கவந்த அளபெடையாம்.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை."

இதனுள் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு அளபெடுத்துவாறு காண்க. இஃது இன்னிசை நிறைக்கவந்த அளபெடையாம். செய்யுளில் ஓசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு அளபெடுப்பது இன்னிசை யளபெடையாம்.

"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்."

இதனுள் நசை என்னும் பெயர்ச்சொல் விரும்பியென வினையெச்சப் பொருள் படும்பொருட்டு அளபெடுத்தவாறு காண்க. இஃது சொல்லிசை நிறைக்கவந்த அளபெடையாம்.

பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லினிசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை நிறைக்கவந்த அளபெடையாம்.

(தொடரும்.)

(இலக்கிய விலக்கண வேதாந்த தர்க்க போதகாசிரியர்;)
கோ. வடிவேல் செட்டியார்.
சென்னை.

---

## உயர்ந்த செல்வம்.

(206-வது பக்கத் தொடர்ச்சி.)

### VI.

சன்யாசி பலதரம் கணக்குகளை தவறாகப் போடுவதும் திருத்துவதும் செய்து, கடைசியாக பூமியின் கீழ்ச்செல்லும் சுரங்கத்தின் நுழை

வாயிலுக்கு ஒரு வழியை கண்டுபிடித்துவிட்டார். ஒருபந்தம் கொளுத்திக் கொண்டு அவர் உள் நுழைந்தார். செங்கற் சுவர்கள் உளுத்து பாசிபிடித்து இருந்தன. அவற்றின் உடைப்புகளினின்று நீர் சொட்டிக்கொண்டிருந்தது. சிலவிடங்களில் கும்பல் கும்பலாக தவளைகள் தூங்கிக்கொண்டிருந்தன. வழுக்கலான கற்களின்மேல் அடிவைத்து சிறிது தூரம் நடந்து ஒரு சுவரண்டைவந்து சேர்ந்தார். வழியில்லை. சன்யாசி ஒரு கனத்த இரும்புக்கம்பிகொண்டு சுவரில் பல இடங்களில் தட்டிப்பார்த்தார்; எல்லாவிடத்திலும் சிறிதும் சந்தேகமின்றி கம்பீரமான சப்தமே கேட்டது; எங்கேனும் ஒரு வெடிப்பும் இல்லை. சந்தேகமின்றி சுரங்கம் இங்கே முடிந்துவிட்டது.

அவர் அன்றிரவெல்லாம் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்து காலையில் கணக்குகளை முடித்து திரும்பவும் சுரங்கத்தில் நுழைந்தார். இம்முறை, கடிதத்தில் கூறிய இரகசியமார்க்கங்களை கவனமாய்ப் பின்பற்றி ஒரு குறித்த இடத்திலிருந்து ஒரு கல்லைத்தள்ளி ஒரு கிளைவழியே போனார். ஆனால் திரும்பவும் இன்னொரு சுவர் தடுத்துவிட்டது.

ஆனால் கடைசியாக ஐந்தாநாளிரவு நுழைந்தபொழுது "இன்றிரவு நிஸ்சந்தேகமாக நான் வழியைக் கண்டுபிடித்துவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டார். வழி வளைந்து வளைந்து சென்றது. அதன் கிளை வழிகளுக்கும் திருப்பங்களுக்கும் முடிவே இராதுபோல் தோன்றிற்று. சில விடங்களில் வழி தாழ்ந்து குறுகியிருந்தமையின் முழங்கால்களால் நகர்ந்து செல்லவேண்டி யிருந்தது.

பந்தத்தை பத்திரமாகப் பிடித்துக்கொண்டு கடைசியாக ஒரு வட்டவடிவமான பெரிய அறையில் வந்து சேர்ந்தார். அங்கே மத்தியில் கெட்டியாக கட்டப்பட்டிருந்த ஒருகிணறு இருந்தது. அவருடைய தீவட்டியினுதவியால் அக்கிணறு எவ்வளவு ஆழமுள்ளது எனத்தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் கூரையிலிருந்து கிணற்றினுள் ஒரு கனத்த சங்கிலி தொங்கவிடப் பட்டிருந்தது. அதை அவர் தன் முழு பலங்கொண்டிழுக்க அது சற்றே அசைந்தது. ஆனால் கிணற்றின் அடியிலிருந்து ஒரு வெண்கலவோசை உண்டாய் அதன் எதிரொலி அவ்விருண்ட அறையை நிறப்பிற்று. சன்யாசி சந்தோஷத்தினால் "கடைசியாக அதைக் கண்டுபிடித்துவிட்டேன்" எனச் சத்தமிட்டார்.

அடுத்தக்ஷணத்தில் அவர் நுழைந்துவந்த உடைந்த சுவரின் துவாரத்திலிருந்து ஒரு பெருங்கல் புரண்டுவிழுந்தது. யாரோஒருவன் அலறிக்கொண்டு தரைமேல் விழுந்தான். இச்சப்தத்தால் சன்யாசி திடுக்கிட்டு கையிலிருந்த தீவட்டியைக் கீழேபோட்டார். அறையும் அந்தகாரத்தில் முழுகியது.

## VII.

அவர் "யாரங்கே" என்று கேட்டார். பதில் ஒன்றும் வரவில்லை. அவர் கையை நீட்டி ஒரு மனிதனுடைய தேகத்தைத் தொட்டார். அவர் அதை அசைத்து "நீ யார்" என்றார். இன்னும் பதிலில்லை. மனிதன் பிரஞ்ஞையற்றுக் கிடந்தான். சன்யாசி ஒரு சக்கிமுக்கிக்கல்லைத் தட்டி திரிவட்டியைக் கண்டுபிடித்து அதைக் கொளுத்தினர். இதற்குள் அவனுக்கு சிறிது பிரஞ்ஞைவர, நோய் தாங்கமுடியாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டே உட்கார யத்தனித்துக்கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் சன்யாசியார் "ஏன், மிருத்யுஞ்சயன்! நீ இங்கு என்னசெய்கிறாய்?" என்றார்.

மிருத்யுஞ்சயன்:—"அப்பா, என்னை மன்னியுங்கள். கடவுள் என்னை போதுமானவளவு தண்டித்துவிட்டார். அந்தக் கல்லை உம்மீது புரட்ட யத்தனிக்கும்போது என் கால்தவறி விழுந்தேன்" என்றான்.

சன்யாசி:—"என்னைக் கொன்றால் உனக்கு என்ன நன்மை உண்டாயிருக்கும்" எனக்கேட்டார்.

மிருத்யுஞ்சயன்:—"என்ன நன்மையா? உண்மை! எனது கோவிலில் புகுந்து அவ்விரகசியக் கடிதத்தை நீர் ஏன் திருடினீர்? இந்த சுரங்கத்தில் நீர் என்னசெய்கிறீர். நீர் திருடரும் வஞ்சகருமாவீர். அக்கடிதத்தை எனது பாட்டனாரிடம் கொடுத்த சன்யாசி எங்கள் குடும்பத்தில் ஒருவன் அவ்வெழுத்துக்களின் இரகசியத்தைக் கண்டுபிடிப்பான் என்றார். அவ்விரகசியம் எனக்குரியது; இக்காரணத்தால் நான் உமது நிழல்போல் உம்மைப் பின்தொடர்ந்து இத்தனைநாள் ஊணுறக்கமின்றித் திரிந்தேன். பிறகு நீர் 'கடைசியாக அதைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று கூவின போது எனக்கு பொறுக்க முடியவில்லை. நான் உம்மைப் பின்பற்றி வந்து சுவரின் பின் ஒளித்திருந்தேன்; உம்மைக்கொல்ல யத்தனித்தேன். நான் பலஹீனனாயும் தரை வழுக்கலாயும் இருந்தமையின் அங்ஙனம் செய்யத் தவறிவிழுந்தேன். நீர் விரும்பின் என்னைக் கொல்லும்; நான் எனது பொக்கிஷத்தைக் காக்க ஓர் காவல்பூதமாய் விடுவேன். ஆனால் நான் உயிரோடிருந்தால் நீர் அதைக் கொண்டுபோதல் முடியவே முடியாது. முடியாது, முடியாது, முடியவே முடியாது. நீர் யத்தனித்தால் நான் இக்கிணற்றில் விழுந்து உயிர் துறந்து உமக்கு பிரஹ்மஹத்தி தோஷத்தை உண்டாக்குவேன். நீர் இச்செல்வத்தை எப்போதும் அனுபவித்தல் முடியாது. எனது பாட்டனும் தகப்பனும் வேறொன்றையும் நினையாராய் இதையே நினைத்துக்கொண்டிருந்து இறந்தனர். நான் அதைத் தேடும்பொருட்டு பெண்சாதி பிள்ளைகளை விட்டு, ஊணுடை

யின்றி, இடத்துக்கு இடம் பித்தனைப்போலவலைந்தேன். எனக்குக் காணக் கண்களுள்ளவரை இச்செல்வத்தை எடுத்துப்போதல் கூடாது!'' எனப் பதிலுரைத்தனன்.

## VIII.

சன்யாசி அமைதியாக: "மிருத்யுஞ்சயா! நான் சொல்வதைக் கேள். நான் எல்லாவற்றையும் சொல்லுகிறேன். உனது பாட்டனாரின் கடைசித்தம்பி ஒருவர் இருந்தது உனக்கு ஞாபகமிருக்கிறதா?'' என்றார்.

மிருத்யுஞ்சயன்:—"ஆம்! அவர் வீட்டைவிட்டுச் சென்றார். அவரைப் பற்றி பிறகு கேள்விப்படவில்லை'' என்றான்.

சன்யாசி:—"நன்று, அந்த சங்கரன் நான்தான்'' என்றார்.

மிருத்யுஞ்சயன் ஒரு பெருமூச்சுவிட்டான். அவன் இதுவரை தன்னையே இச்சொத்துக்கு சொந்தக்காரனென நினைத்திருந்தான். இப்போது இப்பந்து அதில் தனக்கும் சமபாத்தியதை யுண்டென்று நிரூபித்துவிட்டார். அவன் தனது உரிமை அழிக்கப்பட்டதாக நினைத்தான்.

சங்கரர் மேலும் தொடங்கி: ''எனது தமையன் அக்கடிதத்தை சன்யாசியிடமிருந்து பெற்றது முதல் அதை எனக்குத் தெரியாமல் மறைத்துவைக்க தன்னால் கூடுமான சகல வகைகளாலும் யத்தனித்தான். அவன் எவ்வளவுக் கெவ்வளவு மறைக்க யத்தனித்தானோ அவ்வளவுக் கவ்வளவு எனக்கு அதை யறியவேண்டுமென்னும் அவா மேலிட்டது. சீக்கிரமே அவன் அதை தேவியின் பீடத்தின் கீழ் மரப்பெட்டியில் வைத்தானென்பதை கண்டுகொண்டேன். நான் ஒரு கள்ளச்சாவியி னுதவியால் சமயம் வாய்த்தபோதெல்லாம் அதை எடுத்து அதிலிருந்த எழுத்துக்களையும் குறிகளையும் பார்த்து அங்ஙனமே எழுதிக்கொண்டேன். நான் எழுதி முடித்ததும் அச்செல்வத்தை நாடித் தேடப்புறப்பட்டு விட்டேன். எனது பெண்சாதியையும் ஏககுமாரனையும்கூட விட்டுவிட்டேன். அவர்களிலொருவரும் இப்போது ஜீவித்திருக்கவில்லை. நான் திரிந்துகொண்டிருந்தபொழுது எவ்வெவ் விடங்களைக் கண்டேனென்பதை விவரிப்பதில் பலனில்லை. இக்கடிதம் எனது தமையனுக்கு ஒரு சன்யாசியால் கொடுக்கப்பட்டமையின் ஒரு சன்யாசிதான் அதன் பொருளுணரக்கூடுமென நிச்சயித்து, சமயம் நேர்ந்தபோதெல்லாம் சன்யாசிகளுக்குத் தொண்டுசெய்ய ஆரம்பித்தேன். அவர்களிலனேகர் வேஷதாரிகளா யிருந்தமையின் என்னிடமிருந்து அதை திருடிக்கொள்ள முயன்றனர். இவ்வாறு பல்லாண்டுகள் கழிந்தும் எனக்கு ஒரு கணநேரமாவது ஏதாவது சந்தோஷமேனும் மனச்சமாதானமேனும் உண்டாகவில்லை.

(தொடரும்.)

ச. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

## உலக விநோதங்கள்.

விதவா விவாகம்:—1925ஹ செப்டம்பர் மாதத்தில் மறு விவாகம் செய்துகொண்ட விதவைகளின் தொகை 281. இவ் வருஷ ஆரம்பத்திலிருந்து நடைபெற்ற விதவா விவாகங்கள் 1870. இவற்றுள் சென்னை ராஜதானியில் நடந்தவை 19.

6 மைல் கேட்கும் கடிகாரம்:—பீகார் ஒரிஸா மாகாண கவர்ன்மெண்டார் மணிகூண்டில் வைப்பதற்காக ஒரு கடிகாரம் வாங்கி யிருக்கிறார்களாம். அதன் விலை 16000 ரூபாய். அது மணியடித்தால் 6 மைல்தூரம் கேட்குமாம்.

ஆரோக்கியத்திற்காக உபவாசம்:—ஆகாரமில்லாமல் எத்தனைநாள் ஜீவித்திருக்கலாம்? ஸ்கார்பரில் ஒரு முனிசிபல் கௌன்சிலர் 3 வாரம் யாதொரு ஆகாரமில்லாமலே யிருந்தார். அதனால் அவர் சரீரத்திற்கு மிகுந்த ஆரோக்கிய முண்டாயிற்றாம். சில வருஷங்களுக்கு முன் 40 நாளைக்குமேல் உணவின்றி யிருக்கமுடியாது என்று நினைத்து வந்தார்கள். மான்செஸ்டரில் ஒருவர் 86 நாள் பட்டினி யிருந்தார். டாக்டர் டானர் என்பவர் ஆரோக்கியத்திற்காக அடிக்கடி உபவாச மிருப்பது வழக்கமாம். ஒரு முறை 40 நாளிருந்தார். அவர் 100ஹ ஜீவித்திருந்தாராம். ஆசிரியர் அப்டன் சிங்க்லர் அடிக்கடி 10, 12 நாள் உபவாச மிருப்பார். ஒருவர் 50 நாள் பட்டினி யிருந்ததால் அவர் சரீரத்திலிருந்த வியாதி நீங்கிவிட்டதாம். பிடிவாதத்தால் மாக்ஸ்வினீ 74 நாள் ஆகார முட்கொள்ளவில்லை. மற்றொருவர் 67 நாள் வெகு கடினமாக இருந்ததால் பிராணன் நீங்கிற்று. பிரான்ஸ் தேசத்தில் ஒரு கைதி 67 நாள் பட்டினி யிருந்ததாக ரிகார்ட் ஆயிருக்கிறதாம். போலண்டில் ஸ்திரீ டாக்டர் லிபிள்ஸ்கா 40 நாளிருந்தார். முதல் 80 நாள் ஜலமு மருந்தவில்லையாம். ஹார்பரில் ஒரு பாலிகை சொற்ப உணவுடன் 3-ஹ இருந்தாளாம். மார்ஷெல்ரே என்பவர் ஆரஞ்சு பழம் தின்றுகொண்டு 15மீ இருந்தாராம். (விரதாதிகள் மூலமாக உபவாசம் நியமித்த நம் முன்னோருடைய அறிவே அறிவு.

தஞ்சாவூர் அரண்மனை நகைகளை ஏலம் போட்டதில் 108000-க்கு போயிற்றாம்.

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்,

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யம் ... ரூ. 8—0—0

ஷை மணக்குடவர் உரை ... ரூ. 3—0—0

கைவல்ய நவநீத வினவிடை

(ஷையார் இயற்றியது) ... ... ரூ. 2—8—0

பகவத்கீதை வசன வினவிடைஷை ஷை ரூ. 1-12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷையார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... ரூ. 0-12—0

விவேகாநந்தர் உபன்யாச ஞானத்திரட்டு ரூ. 1—0—0

வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... ரூ. 0-12—0

சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன்கூடியது 0-12—0

விவேக சூடாமணி ... ... ... ரூ. 0-12—0

மநீஷாபஞ்சகம் ... ... ... ரூ. 0—5—0

மகாராஜா துறவு-வசனம் ... ... ரூ. 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ரூ. 0—6—0

நாநாஜீவ வாதக்கட்டளை (தமிழ்) ... ரூ. 0—4—0

ஷை (தெலுங்கு) படத்துடன் கூடியது .. ரூ. 0—3—0

காரியசித்தியின் இரகசியம் ... ... ரூ. 0—3—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வ. ஆ.).

உ

# புதிய பதிப்புப் புத்தகங்கள்.

சென்னை அடையாற்று நெ. தி. காலேஜ் தமிழாசிரியர் பண்டித அ. கோபாலையரவர்கள் பதிப்பித்தவை.

பெருந்தேவனார் பாரதம்.—இதனைப் பாரதவெண்பா என்றுஞ் சொல்லுவார்கள். இனியபாட்டும் இடையிடையே அழகிய வசனமுமாக உள்ளது. யாவரும் படித்து இன்புறத்தக்கது. இப்புத்தகம் முழுதுங் கிடைக்காமையால், கிடைத்த அளவும் பரிசோதித்து முகவுரை, விஷயசூசிகை, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியன சேர்த்து, அழுத்தமும் பளபளப்பும் வாய்ந்த கடிதத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது.

| | ரூ. அ. பை. |
|---|---|
| உத்தியோக, வீடும, துரோணபருவங்கள், 830 பாட்டு வசனத்துடன் உயர்ந்த கலிகோ பைண்டு | 3—2—0 |
| உத்தியோகபருவ மாத்திரம் (ராப்பர்) | 1—6—0 |
| வீடும, துரோண பருவங்கள் (ஷை) | 1—6—0 |
| *கலிங்கத்துப்பரணி:—அரும்பொருள் விளக்கவுரை, அரும்பதவகராதி சோழ வமிசாவளி முதலியவற்றுடன் அழகான கிலிட் பைண்டு | 1-12—0 |
| *கலிங்கத்துப்பரணிச் சுருக்கம்:—குறிப்புரை, அபிதானவிளக்க முதலியவற்றுடன் | 0—6—0 |
| தூதகடோற்கசம்:—(அல்லது கடோற்கசன் தூது) பாரதகதை சம்பந்தமான ஒரு சிறு நாடகம். வடமொழியிலிருந்து எளிய வசன நடையில் மொழி பெயர்க்கப்பட்டது | 0—5—0 |

"செந்தமிழ்மந்திரம்" புத்தகசாலை,

பிராடீஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

---

* Approved by the Text-Book Committee.